சூன் - 2012

திருவள்ளுவர் ஆண்டு 2043

# செந்தமிழ்

தொகுதி : 56
பகுதி : 8

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




செந்தமிழ் கல்லூரி 55ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் உயர்நீதிமன்ற நீதியரசர் திருமதி. எஸ். விமலா அவர்கள் பல்கலைக் கழக முதல்நிலை பெற்ற மாணவிக்கு பரிசு வழங்குகிறார். உடன் கல்லூரி செயலர் இரா. குருசாமி அவர்கள் மற்றும் தமிழ்ச்சங்க செயலாளர் இரா. அழகுமலை, ஆட்சிக்குழு உறுப்பினர் சு. வீரணசாமி, திரு. முத்தையா பசும்பொன் மற்றும் முதல்வர் மு. மீனா அவர்கள்

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 56 திங்கள் இதழ்

பகுதி : 8 திருவள்ளுவர் ஆண்டு 2043

சூன் 2012




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| திருவைகுந்தம் என்னும் வைணவத் திருத்தலம் | முனைவர் மு. முத்தையா | 4 |
| பள்ளு இலக்கியங்களின் சமூகப் பின்புலம் | சி. பாக்கியராஜ் | 14 |
| குறுந்தொகையில் பாடுபொருள்கள் | வெ. சஞ்சீவராயன் | 21 |
| அற இலக்கியங்கள் உணர்த்தும் கொல்லாமையும் புலால் மறுத்தலும் | இ. ரஞ்சித்குமார் | 29 |
| இளைஞர்களே விழிமின் | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 36 |
| தமிழக அரசின் தமிழ்த்தாய் விருது பெற்ற மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு வாழ்த்துப்பா | புலவர் மு. சன்னாசி | 38 |

# இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம் !

இதோ! ஜுன் மாத இதழைத் தங்கள் கைகளில் தவழ விடுவதில் பெருமையடைகிறோம். வியாபார விளம்பரம் இல்லாமல் தமிழ் இலக்கிய, இலக்கண வரலாற்றுப் பெட்டகமாகப் பேணப்பட்டுவரும் ஒப்பற்ற ஒரே இதழ் நம் செந்தமிழ் இதழ் மட்டுமே என்பதை வாசகர்கள் நன்குணர்வர்.

இம்மாத இதழில் நான்கு நற்றமிழ்க் கட்டுரைகளும், நான்கு மரபுக் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

இறைநெறியியல் ஆழங்கால்பட்டு வாழ்ந்த ஆழ்வார்கள் நூற்றிவிட்டு வைணவத் திருத்தலங்களுக்குச் சென்று அருட்பாக்கள் அருளி ஆனந்த வாழ்வு பெற்றமையை "திருவைகுந்தம் என்னும் வைணவத் திருத்தலம்" என்ற கட்டுரையில் முனைவர் மு. முத்தையா அவர்கள் முத்தான கருத்துக்களை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தி இருப்பதை வாசகர்கள் வாசித்து நல்வாழ்வு பெறலாம்.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய பள்ளு இலக்கியங்கள், அக்கால பள்ளமடையில் வாழ்ந்த மக்களின் சமூகப் பழக்க வழக்கங்களை "பள்ளு இலக்கியங்களின் சமூகப் பின்புலம்" எனும் தலைப்பில் சி. பாக்கியராஜ் அவர்கள் நுட்பமோடு வெளிப்படுத்தும் திறம் பாராட்டுக்குரியது.

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகை வெவ்வேறு வகைப்பட்ட பாடுபொருளைக் கொண்டனவாக விளங்குதலை அறிஞர் வெ. சஞ்சீவிராயன் அவர்கள் "குறுந்தொகையில் பாடுபொருள்கள்" என்னும் தலைப்பில் மிகச் சிறந்ததோர் ஆய்வுக்கட்டுரையை இம்மாத இதழுக்குத் தந்து நமது இலக்கிய இதழைப் பெருமைப்படுத்தி இருப்பது பாராட்டிற்குரியது.

கொல்லாமையும், புலால் மறுத்தலும் தமிழக அற இலக்கியத்திற்கு மட்டுமே உரியது என்பதை ஆய்வறிஞர் இ. இரஞ்சித்குமார் அவர்கள் திட்பநுட்பத்தோடு விளக்கி இருக்கும் திறம் மகிழ்ச்சியைத் தருகிறது. மேலும், கவிவேந்தர் வேழவேந்தன் அவர்களின் கவிதையோடு புலவர் நு.ர. ஆறுமுகம், புலவர் மு. சன்னாசி, புலவர் சி. பாண்டுரங்கன், ஆகியோரின் கவிதைகளோடு இம்மாத இதழ் வண்ணத் தமிழாய் வட்டமிட வாசகர்களுக்கு சமர்ப்பிக்கிறோம்.

**முனைவர் க. சின்னப்பா**

**இனி நீங்களும் இதழும்....**

# திருவைகுந்தம் என்னும் வைணவத் திருத்தலம்

முனைவர் மு. முத்தையா
விவேகானந்த கல்லூரி

கடவுள் வழிபாட்டில் ஒவ்வொரு சமயத்தவர்களின் இறைக் கொள்கையானது பேரிடம் பெறுகின்றது. இறைவனை அடைய ஒரே வழி பக்தி நெறி என்று கருதியவர்கள் ஆழ்வார்கள். வைணவ சமயத்தின் பேருண்மைகளை நிலை நிறுத்திப் பாடிய பாடல்கள் பாசுரங்களாகவும், இறைத்தலங்கள் திவ்ய தேசங்களாகவும் பெருமை பெற்றன. இத்திவ்ய தேசங்கள் 108 – னுள் பாண்டிய நாட்டுத்தலங்கள் சிந்தித்தற்குரியன. இவண் ஆழ்வார் பாசுரங்கள் வழிச்சுட்டப்பெறும் பாண்டிய நாட்டுத்தலங்கள் வரிசையில் இடம் பெறும் திருவைகுந்தம் பற்றி ஆராயப்படுகின்றது

## ஆழ்வார்கள்

திருமால் வழிபாடு தமிழ் மக்களிடையே நிலவி வந்துள்ளதைத் தொல்காப்பியம், கலித்தொகை, பரிபாடல் போன்ற நூல்களிலேயே அறிய முடிகின்றது. வைணவ வழிபாட்டில் திருமாலைத் தலைமையாகக் கொண்டு இறைநெறியில் ஆழ்ங்காற்பட்டு வாழ்ந்தவர்கள் 'ஆழ்வார்கள்' என்று போற்றப்படுகின்றனர். இவர்கள் பன்னிருவராவர். மதுரகவியாழ்வார், ஆண்டாள் இருவரையும் தவிர்த்துப் பதின்மர் என்று கூறும் வழக்கமும் உண்டு. இவ்வாழ்வார்கள் 108 வைணவத் தலங்கட்குச் சென்று இறைவனைப் பல வாறான அருட்பாடல்களில் பாடிப்பேரானந்தம் அடைந்துள்ளமை அறியத் தக்கது. இவ்வைணவ மரபில் தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகியன பெரிதும் போற்றப்பட்டன. ஆழ்வார்களுடைய அருட்பாக்களை, நாதமுனிகள் என்பவர் தொகுத்து வைணவ உலகிற்குப் பெரிதும் பயன்படும் வகையில் "நாலாயிரத்திவ்ய பிரபந்தம்" என்னும் பெயரில் தந்துள்ளார்.

## ஆச்சாரியார்கள்

தமிழகத்தில் பல்வேறு சமயங்கள் காலங்காலமாகத் தழைத்தோங்கி வந்த நிலையில், திருமாலின் சிறப்பினைப் பக்தி நெறியாக வளர்த்து, பெருமை சேர்த்தவர்கள் ஆழ்வார்களே என்பது வெளிப்படை. முல்லை நிலத்தின் கடவுளாகப் போற்றப்படும் திருமால், முழு முதல் பரம்பொருள் என்றும், அவனைச் சரணடைந்தால் எண்ணில்லாத இன்பம் பெருகும் என்றும் நம்பினர். இறையனுபவக் கொள்கையின் அடிப்படையில், வைணவ சமயத்தின் தத்துவங்களையும், ஆழ்வார்கட்குப் பின் வந்த ஆச்சாரியார்கள் செய்தனர். ஆழ்வார்களின் பாசுரங்களில் பொதிந்து கிடக்கின்ற உண்மைகளையும், அவதாரப் பெருமைகளையும், மேலும், இறைநிலையினை விளக்கி உரைக்கும் பெரும்பங்கினையும் செய்து வந்துள்ளனர். இதனால் வைணவ சமயம் ஒரு பக்தி இயக்கமாக மக்களிடையே பெரிதும் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்துள்ளதை அறிய முடிகின்றது.

## பாண்டி நாட்டுத்தலங்கள்

ஆழ்வார்கள் அருளிச் செயல்களில் பெருமைப் படுத்தப்பட்ட 108 திவ்ய தேசங்களில் பதினெட்டு இடங்கள் பாண்டி நாட்டு வைணவத் தலங்களாக அமைந்துள்ளன. அவை, திருவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, திருக்குறுங்குடி, திருக்குளந்தை, திருக்கடல், திருக்கோட்டியூர், திருக்கோளூர், திருச்சிவரமங்கை, திருத்தங்கல், தென்திருப்பேரை, தொலைவில்லிமங்கலம், திருப்புல்லாணி, திருப்புளிங்குடி, திருமாலிருஞ்சோலை, திருமயம், திருமோகூர், திருவரகுணமங்கை, திருவில்லிப்புத்தூர், ஆகிய பதினெட்டுப்பதிகள் பாண்டிநாட்டு வைணவத்தலங்களாகப் போற்றப்படுகின்றன.

இப்பாண்டி நாட்டு வைணவத்தலங்களை நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், ஆகிய ஏழு, ஆழ்வார்கள் 330 பாடல்களில் மங்களாசாசனம், சிறப்பித்துள்ளனர்.

## பாண்டி நாட்டு வைணவத்தலங்களில் திருவைகுண்டம்

தமிழ் நாட்டின் இன்றையத் தூத்துக்குடி மாவட்டத்தில் இடம் பெற்றுள்ள ஊர் திருவைகுண்டம் ஆகும். இத்தலத்தின் மூலவராக ஸ்ரீவைகுந்த நாதரும், தாயாராக வைகுந்த நாயகி மற்றும் சொர்ணத நாயகியும் அருள் பாலிக்கின்றனர். இத்தல விருட்சமாகப் பவளமல்லி விளங்கி வருகின்றது. தாமிரபரணி தீர்த்தம், ப்ருகு தீர்த்தம், கலசதீர்த்தம் ஆகியன இத்தலத்தின் தீர்த்தங்களாகச் சுட்டப்படுகின்றன். ஆயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்த கோவிலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தலத்தின் இறைவன் ஸ்ரீவைகுந்த நாதர் நின்ற கோலத்தின் வழி அருள் செய்து கொண்டிருக்கின்றார். இத்தலத்தின் உற்சவராக ஸ்ரீகள்ளப்பிரான் விளங்கிவருகின்றார்.

## நவதிருப்பதிகளுள் முதன்மையானது

பாண்டி நாட்டு வைணவத் தலங்களில் திருவைகுண்டம், வரகுணமங்கை, திருக்கோளூர், திருப்புளிங்குடி, ஆழ்வார் திரு நகரி, தென் திருப்பேரை, பெருங்குளம், தொலைவில்லிமங்கலம், ஆகியவை நவக்திருப்பதிகள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த நவதிருப்பதிகள் நவக்கிரகங்களுடன். தொடர்புடையவை என்று கருதி வழிபடப்பட்டு வருகின்றன. இத்தலங்களில் எழுந்தருளியுள்ள பெருமாள், நவக்கிரங்களாகப் போற்றி வழிபடப் பட்டு வருவதால், சோழ நாட்டில் உள்ள நவக்கிரகங்கள் வழிபட்டு வருவது அறிய முடிகின்றது. கிரக தோஷம் உடையவர்கள் இந் நவதிருப்பதி வந்து அந்தந்த கிரகதோஷம் உடையவர்கள் அவ்வத்தலங்களில் வணங்கினால் நிவர்த்தியாகும் என்ற நம்பிக்கை இருந்து வருகின்றது.

திருவைகுண்டம் சூரியத்தலமாகவும் நவதிருப்பதிகளுள் முதன்மையானதாகவும் விளங்குகின்றது. வரகுணமங்கை சந்திரன் திருக்கோளூர் செவ்வாய், திருப்புளிங்குடி புதன், ஆழ்வார்திருநகரி குரு, தென்திருப்பேரை சுக்ரன், பெருங்குளம் சனி, திருத்தொலைவில்லி மங்கலத்தில் உள்ள முதலாவது தலம் ராகு,(தேவப்பிரான் சந்நிதி), இரண்டாவது தலம் கேது, (அரவிந்த லோசனார் சந்நிதி என நவக்கிரகத் தலங்களாக விளங்கி வருகின்றன.

திருவைகுண்டத்தில் மூலவரும் சிறப்புநிலையும் திருவைகுண்டத்தில் உள்ள பெருமாள் திருவைகுந்த நாதர் சந்திர

*விமானத்தின் கீழ் நின்ற நிலையில் (staninj postune) காட்சி தருகின்றார்.* கையில் தண்டம் இருக்கின்றது. பெரும்பாலும், ஆதி சேஷனில் சயனித்தபடி பெருமாள் இருப்பார். ஆனால் இங்கோ, தலைக்குமேலே ஆதிசேஷன் குடைபிடிக்கப் பெருமாள் நின்ற கோலத்தில் இருப்பது தனிச் சிறப்பாகும்.

## நம்மாழ்வாரின் மங்களாசாசனம்

ஸ்ரீவைகுண்டம் என்னும் இப்புனிதத்தலம் நம்மாழ்வாரால் மங்களாசாசனம் இரு பாசுரங்களில் செய்யப்பட்டுள்ளது. அவை :

* புளிங்குடி கிடந்து வரகுணமங்கையிருந்து வைகுந்தத்துள் நின்று தெளிந்த என் சிந்தை அகழ்கழியாதே என்னை யாள்வாய் எனக்கருளி நளிர்ந்த சீருலகம் மூன்றுடன் வியப்ப நாங்கள் கூத்தாடி நின்றார்ப்ப பளிங்கு நீர் முகிலின் பவளம் போல் கனிவாய் சிவப்ப நீ காண வாராயே

* எங்கள் கண் முகப்பே உலகர்கள் எல்லாம் இணையடி தொழுதெழுது இறைஞ்சி தங்கள் அன் பாரத் தமது சொல்வலத்தால் தலைத் தலைச் சிறந்து பூசிப்ப திங்கள் சேர் மாடத் திருப்புளிங்குடியாய் திருவை குந்தத்துள்ளாய் தேவா இங்கண் மாஞாலத்திதனுளும் ஒரு நாள் *இருந்திடாய் வீற்றிடங் கொண்டே. என்றமைகின்றன.*

நம்மாழ்வாருக்கு அருள வந்த பெருமாள் அவர் பக்தியில் உயர் நிலை அடையும் வகையில் முதலில் புளியங்குடியில் கிடந்தும் (படுத்த கோலம்) பின் வரகுணமங்கையில் அமர்ந்தும், இத்தலத்தில் நின்றும் காட்சி தருகிறார். என *வைணவ ஆச்சாரியாரான அழகிய மணவாளப் பெருமான் நம்மாழ்வாரின் பாசுரத்திற்கு விளக்கம் சொல்லியுள்ளார்.*

தென் ஆற்காடு மாவட்டத்தில் தென் பெண்ணை ஆற்றங்கரையில் உள்ள திருக்கோஷ்டியூரில் எதிர்பாராத வகையில் முதல் மூன்று ஆழ்வார்களான பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்ட சூழல் பெருமைக்குரியதாகும். புயல் வீசிக் கொண்டிருந்த காரிருள் வேளையில் மூன்று ஆழ்வார்களும் சந்தித்துக் கொண்டனர். தங்குவதற்கு இடம் ஏதும் உண்டோ என்று தேடிய பொழுது பொய்கையாழ்வார், ஒருவர் இங்கே படுக்கலாம்; இருவர் அமரலாம்; மூவர் நிற்கலாம் என்று தெரிவித்ததாகக்

கூறுவர். அப்படியானால் மூவரும் நிற்கலாம் என்று கூறி மூவரும் நின்றனர். இதற்கிடையில் திருக்கோஷ்டியூர் பெருமாள் அவர்கள் ஊடே புகுந்து நெருக்கியதாகவும் கூறுவர்.

முதல் ஆழ்வார்களின் இவ்விறைபக்தி ஆகிய சூழல், புளிங்குடிகிடந்து வரகுணமங்கை இருந்து, வைகுந்தத்துள் நின்று.... என்று பா்டும் பாசுரமாக மலர்ந்துள்ளது என நினைக்கத் தோன்றுகின்றது. ஒரே பாசுரத்தில் புளிங்குடி, வரகுணமங்கை, வைகுந்தம் ஆகிய முத்தலங்களில் கிடந்த கோலம், அமர்ந்த கோலம், நின்ற கோலம் ஆகிய மூன்று நிலைகளில் காட்சி தரும் இறை நிலையினை மெய்யறிவாகச் சுட்டியுள்ளமை இங்கு சிந்தித்தற்குரியது.

வைணவ சமயச் சான்றோரான நம்மாழ்வார், தம் வாழ்வில் உணர்ந்த இறையுணர்வின் மேம்பாட்டின் வெளிப்பாடாகப் புலப்படும் இப்பாசுரம் பல்வேறு சிறப்புக்களைத் தெளிவுறுத்தும். இறைமையின் மீது கொண்ட அளவற்ற பக்திப் பெருக்கின் காரணமாக வெளிப்படுகின்ற தன்னுணர்வின் வழியாக இறையின் குணத்தையும் இயல்பு நிலையினையும் வலியுறுத்துவதை உணரமுடிகின்றது. இத்தகைய நிலையில் திருக்கோயிலின் சிறப்பு, இத்தலத்தில் எழுந்து அருளியுள்ள திருமேனியின் பெருமை, இறைவனின் திருவருட்செயல்கள் பற்றிச் சிந்தித்தற்குரியதாகின்றது.

பொதுவாக, ஆலயங்களில் இடம் பெறும் இறைவனின் திருமேனிகள் மூன்று வகைகளில் அமையும். அவை, அசையும் தன்மையில் இருப்பது, அசையாத் தன்மை பெற்றிருப்பது, இவ்விரண்டு தன்மைகளும் ஒருங்கே பெற்றமைவது என வகைப்படுத்தப்படும். இதனைச் சலம், அசலம், சலாசலம் என்றும் பெயர்களில் சுட்டுவர்.

இங்கு அசையாத் தன்மையில் இடம் பெறும் மூல விக்கிரகங்கள், துருவபேரங்கள் என்று பெயர் பெறும். இவை ஸ்தானக நிலை –நின்றகோலம், ஆசனநிலை – இருந்தகோலம், சயனநிலை கிடந்த கோலம் என்னும் மூன்று வகைத்திருக்கோல நிலைகள் திருமால் கோயில்களில் சிறப்பிடம் பெறுகின்றது. 108 திவ்ய தேசங்களில் எம்பெருமான் நின்ற கோலத்தில் 67 திவ்ய தேசங்களிலும், அமர்ந்த கோலத்தில் 17 திவ்ய தேசங்களிலும், பள்ளி கொண்ட திருக்கோலத்தில் 24 திவ்ய தேசங்களிலும் காட்சியளிக்கின்றார்.

வடதிருப்பதி என்று போற்றப்படும் திருமலையில் சீனிவாசப்பெருமான் நின்றகோலத்தில் எழுந்தருளிப் பக்தர்களைக்காக்கின்றார். அது போல, ஸ்ரீவைகுண்டத்திலும் வைகுந்தநாதர் ஆதிசேஷன் குடைபிடிக்க நின்ற கோலத்தில் எழுந்தருளிப் பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கோவில்களிலும், இல்லங்களிலும் அன்பர்களின் விருப்பத்திற்கிசைந்த வடிவில் எழுந்தருளி அருள் பாலித்தலை அர்ச்சை நிலை என்பர். மேலும், திருமாலின் பத்து அவதாரங்கள் மட்டுமின்றி இறைவன் எழுந்தருளியுள்ள விக்கிரகங்களில் அவதரித்தல் என்பதும் இங்குக் குறிக்கத்தக்கது. இதனை அர்ச்சாவதாரம் என்று கூறுவர். இறைவன் தனதருளால் தூல வடிவங்களிலும் தனது பூரணத்தன்மை இழக்காமலேயே உருவத்திருமேனிகளில் எழுந்தருளியிருக்கின்றான் என்று கருதும் சிந்தனை மேலோங்கியுள்ளதையே வெளிப்படுத்துகின்றது.

## வைகுண்டநாதர் பால்பாண்டி ஆன கதை

திருவைகுண்ட பெருமாளுக்குப் பால்பாண்டி என்ற பெயரும் நிலவுகின்றது. சத்திய லோகத்தில் படைப்புத் தொழிலைச் செய்து வந்த பிரம்மனிடம் சோமுகன் என்னும் அசுரன் வேத சாஸ்திரங்களைத் திருடிச் சென்று விட்டான். இதனால் படைப்புத் தொழிலானது நின்று போனது. இந்நிலையில் திருமால் ஒருவரே தம் நிலையில் உதவ முடியும் என்று உணர்ந்த பிரம்மா, பூவுலகம் சென்று தவம் செய்ய விழைந்தார். அவ்வாறு தவம் செய்வதற்கு உரிய இடத்தினைக் கண்டறிந்து வருமாறு தன் கையில் இருந்த பிரம்பினை வாலிப இளைஞனாக்கி அனுப்பி வைத்தார். இவர் திரும்பி வரவே இல்லை. பின்பு தன்னிடம் இருந்த தண்டத்தை அனுப்பினார். இப்பூவுலகில் தாமிரபரணி ஆற்றங்கரையின் இயற்கைச் சூழல் தவநிலைக்கு ஏற்றது என்று கூறியது. இவ்விடத்திற்குப் பிரம்ம தேவன் வருகை புரிந்து தவமேற்கொண்டார். பிரம்மனின் தவத்தின் மேன்மை அறிந்த எம்பெருமான் இறைவியரோடு காட்சி தந்தார். அவ்வமயம் படைப்புத் தொழிலுக்குரிய வேத சாஸ்திரங்களைத் திருடிச் சென்ற அசுரனிடம் இருந்து மீட்டித்தர வேண்டும் என்று கேட்க, இறைவன் வேதங்களை மீட்டித்தந்தார்.

இந்நாளில், தனக்குக் காட்சி தந்த இறைவன், அதே கோலத்தில் இங்கு எழுந்தருள வேண்டும் என்று வேண்டியதால் வைகுந்த நாதராக, திருநாமக் கடவுளாக அங்கு அருள் பாலித்து வருகின்றார்.

பல்லாண்டுகளுக்கு முன்பு தாமிரபரணி ஆற்றங்கரையில் இருந்த கோயிலில் வழிபாடு இன்றிப் போயிற்று. சுவாமி சிலையும் ஆற்றுக் கரையோரம் மண்ணில் புதைந்து விட்டது. மேய்ச்சலுக்காக வந்த அரண்மனைப் பசு, புதைந்திருந்த் புற்றின் கண் பாலைச் சொரிந்தது. இச்செயல் தொடர்ந்து நடந்து வந்ததை அறிந்த பாண்டிய மன்னன் அவ்விடத்தில் இருந்த சிலையைக் கண்டறிந்து கோயில் எழுப்பினான். தினமும் அன்றிலிருந்து சுவாமிக்குப் பால் அபிஷேகம் செய்யும் பழக்கம் உருவானது. பாண்டிய மன்னன் பால் அபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்தமையால் இத்தல இறைவன் "பால்பாண்டி" என்ற பெயர் பெற்றார் என்று குறிப்பிடுவர். வைகுந்த நாதருக்குக் "கள்ளப்பிரான்" எனும் திரு நாமம் உருவானகதை.

வைகுந்தத்தலம் உள்ள இப்பகுதியில் காலதூஷகன் என்னும் பெயர் பெற்ற ஒருவன் வாழ்ந்து வந்தான். இவன் வழிப்பறி, திருட்டு போன்ற செயல்களைச் செய்து வந்த திருடன் ஆவான். தான் திருடியதில் பாதியைக்கோயில் சேவைக்கும், மீதிப்பாதியைத் தான தர்மங்கட்கும் செலவிட்டான். வைகுந்த நாதர் மீது அளவற்ற பக்தியுடைய பக்தனாகவும் இருந்தான்.

ஒரு நாள் மணப்படை என்ற ஊரில் அரண்மனைப் பொருட்களைத் திருடச் சென்ற போது அரண்மனைக் காவலர்களிடம் மாட்டிக் கொண்டான். அன்றாடம் வழிபடும் ஸ்ரீவைகுந்தப் பெருமாளை மனமுருகிப் பிரார்த்தித்துக் கொண்டான். காவலர்கள் இவனை மன்னன் முன் கொண்டு நிறுத்தினர். அப்போது ஸ்ரீவைகுண்ட நாதரே கால தூஷகனின் உடலில் எழுந்தருளி அரசனுக்குப் பல நீதி தர்மங்களை எடுத்துரைத்தார்.

திருடனாக வந்து தான் முன் நிற்பது இறைவனின் திருக்கோலமே என்று அரசன் உணர்கின்றான். அரசனின் வேண்டு கோளுக்கிணங்கிய இறைவன் கள்ளப்பிரானாகிய திருக்கோலத்திலே சேவை சாதித்தார். அன்று

முதல் இத்தலத்தில் உறையும் பெருமானுக்குக் கள்ளப்பிரான் என்ற பெயரும் வழங்கலாயிற்று. உலகில் வாழும் அனைத்திற்கும் ஆதாரமாக விளங்கும் இறைவனை அடைய எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன. அவை கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்று அழைக்கப்படுகின்றன. அத்தகையப் பண்பட்ட உயர் நிலையை அடைய வேண்டுமானால், தனக்கென்று ஒரு குருவினைத் தேர்ந்தெடுத்து அவர் வழிகாட்டும் நெறிமுறைகளில் ,வாழ்ந்தால் நல்ல உயர் நிலைகளை அடைய முடியும். இறைத்தத்துவத்தை உணரத்துடிக்கும் ஒரு சிவான்மா, நல்ல வழிகாட்டுதலில் பேருண்மைகளைக் கண்டறியும் பரமானந்த நிலையினை எய்த இயலும் என்னும் வைணவத்தத்துவ நிலை புலப்படுகின்றது.

வழிப்பறி, கொள்ளை செய்து வந்த திருடன் காலச் சூழலில் இறைவனே நேரில் வந்திறங்கிப் பண்படுத்தும் உன்னத நிலையும் அவன் மீது நட்புள்ளம் கொண்டு அமையுமாறு மன்னனுக்கு அறிவுறுத்திய சிந்தனைகளும் 'கள்ளப்பிரான்' திருக்கோலம் வழி அறிய முடிகின்றது.

கள்ளப்பிரானுக்குத் தை முதல் நாளில் 108 போர்வைகள் அணிவித்து வழிபடுவர். பின் கொடிமரத்தைச் சுற்றி வந்து, ஒவ்வொரு போர்வையாகக் கலைத்து, எடுப்பர். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட 108 திவ்ய தேசங்களில் உள்ள அனைத்துப் பெருமாள்களும் இந்நாளில் கள்ளபிரான் வடிவில் காட்சிதருவதாக நம்பிக்கை. மேலும், திருமாலிருஞ்சோலையில் உள்ள இறைவன் கள்ளழகர் எனவும் திருகச்சி கார்வானத்தில் உள்ள இறைவன் கள்வர் என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

## வைகுண்டநாதர் ஆலயத்தில் சூரிய ஒளி

நவதிருப்பதித் தலங்களில் முதலாவதாகவும், சூரியத்தலமாகவும் விளங்கும் பெருமைக்கு உரியது ஸ்ரீவைகுண்டம் இங்குள்ள இறைவன் சந்திரவிமானத்தின் கீழ் நின்ற நிலையில் காட்சி தருகின்றார். தலைக்கு மேலே ஆதிசேஷன் குடையாக இருக்கின்றார். சித்திரை மற்றும் ஐப்பசி மாதப் பௌர்ணமி அன்று காலையில் சூரிய ஒளி வைகுண்டநாதர் பாதத்தில் விழும். இதற்கு ஏற்றாற்போல், சுவாமி சன்னதி, கொடி மரம் அமைப்பு உருவாக்கப்பட்டு உள்ளது.

## வைகுண்டநாதர் ஆலயத்தில் தல விருட்சம்

தமிழ்ச்சங்க இலக்கியங்கள் மர வழிபாடு செய்யப்பட்டமையைப் புலப்படுத்துகின்றன. ஒவ்வொரு ஊர்களிலும் உள்ள குலதெய்வக் கோவில்களிலும் தல விருட்சங்கள் அமைக்கப்பட்டுப் புனிதமாகக் கருதி வருகின்றனர். இத்தகைய தல விருட்சம் எனப்படும் மர வழிபாடு ஐயாயிரம் ஆண்டுகட்டு முன்பே இந்தியாவில் இருந்திருக்கின்றது. குறிப்பாக, இந்து சமயத்தினரின் வழிபாட்டுக்குரிய' அரசமரம் சிந்துவெளி முத்திரைகளில் காணப்படுவது இவ்வழிபாட்டினை உறுதிப்படுத்துகின்றன.

தமிழக வைணவத் திருத்தலங்களிலும் மர வழிபாடு புனிதமாகக் கருதப்படுகின்றது. ஸ்ரீவைகுண்டநாதர் ஆலயத்தில் தல விருட்சமாகப் பவள மல்லி குறிப்பிடப்படுகின்றது.

## வைகுண்ட ஏகாதசி

மகாவிஷ்ணுவின் இருப்பிடம் வைகுண்டமாகும். பக்தர்கள் பிறவா நிலை (மோட்சம்) கிடைக்க இறைவனை வணங்குகின்றனர். இத்தலத்தில் சுவாமியே வைகுண்டநாதராக அருளுவதால் வேண்டிக் கொள்பவர்கட்கு . இறையருள் கிட்டும் என்ற நம்பிக்கை உள்ளது. வைகுண்ட ஏகாதசியன்று உற்சவர் கள்ளப் பிரானை அர்த்த மண்டபத்திற்குள் கொண்டு செல்வர். இவ்வேளையில் சன்னதியை அடைத்து விடுவர். பின் கண் இமைக்கும் நேரத்திற்குள் நடை திறந்து, சுவாமிக்குத் தீபாராதனை காட்டி உடனே அடைத்து விடுவர். ஒரு சில மணித்துளிகளுக்குள் இந்த வைபவம் நடந்து முடிந்து விடும். இவ்வேளையில் சவாமியைத் தரிசித்தால் பிறப்பில்லாத நிலைகிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

மார்கழி மாதம் வளர்பிறையில் அமாவாசையிலிருந்து பதினோராவது நாள் வரும் ஏகாதசியை வைகுண்ட ஏகாதசி என்று சிறப்பிப்பதோடு விழாவாகவும் கொண்டாடி மகிழ்கின்றனர்.

ஏகாதசி என்பது ஒரு சக்தி. அவள் விஷ்ணுவின் திருமேனியில் விளங்குகின்றாள். அசுரசக்தியை அழிப்பது இந்த விஷ்ணு சக்தி தான். இந்த சக்தி விஷ்ணுவிடம் ஏகாதசியன்று தங்களை நினைத்து உண்மை மனத்துடனும், திடமான சித்தத்துடனும் விரதம் இருப்பவர்களைக் காத்தருள

வேண்டும் என்று வரம் கேட்டதாம். அன்று முதல் ஏகாதசி விரதத்தை எல்லோரும் கைக்கொண்டனர் என்று பதினெண் புராணங்களில் பதும புராணத்தின் உத்தரகாண்டப் பகுதி குறிப்பிடுகின்றது. திவ்ய பிரபந்த பாசுரங்கள் மக்கள் வழக்கில் நிலைத்து நின்று இறைப் பெருமையினைப் போற்றவும் வழக்கிழந்து போகாமலிருக்கவும் வைணவ ஆலயங்களில் இவ்விழா நடத்தப்படுவதும் அறியதற்குரியது.

## தொகுப்புரை

ஆண்டவன் அருள்பெற விழைந்த ஆழ்வார்கள் இறையனுபவப்பெருக்கில் பல்வேறான பக்திநெறியில் ஈடுபட்டு உள்ளனர். இறைவனை நெருங்கும் தன்மையில், நாயக நாயகி பாவத்திலும், குழந்தையாக்கிப் பாசுரம் புனைந்ததும், அடியானாகப் பாவித்துக் கொண்டதும், பல்லாண்டு பாடியதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இறையனுபவமே கனவு நிலையாகவும், இறைவனின் போற்றற்குரிய அவதாரச் செய்திகளின் பெருமைகளையும் பறைசாற்றும் நிகழ்வுகளும் வைணவத் திருத்தலங்களில் வழிபாடாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இத்தகையச் சிறப்புக்கள் திருவைகுண்ட நாதரின் கோயில் ஆலயவழிபாட்டிலும் பெருமை சேர்க்கின்றன என்பதையும் அறியமுடிகின்றது. சித்திரை விழாவின்போது, நம்மாழ்வார் அவரது பிறந்த தலமான ஆழ்வார் திருநகரியிலிருந்து அத்தலத்துப் பெருமாள் பொலிந்து நின்ற பிரானுடன் வைகுந்தநாதர் ஆலயத்திற்கு எழுந்தருளுவார். சுவாமியை மங்களாசாசனம் செய்த பின் அன்ன வாகனத்தில் எழுந்தருளுவார்.அவ்வேளையில் கள்ளப் பிரான் பொலிந்து பிரான், வரகுணமங்கை வெற்றிருக்கை பெருமாள் திருப்புளிங்குடி காய்சின வேந்தபெருமாள் ஆகிய நால்வரும் கருட சேவை சாதிப்பர் என்கின்ற நிகழ்வுகளும் நடந்து வருகின்றன. இறைத்தத்துவத்தின் பெருமைக்கும் ஆன்மீக ஒற்றுமைக்கும் வழிகாட்டுதல்களாக வைகுண்டநாதர் வழிபாடும் வைணவச்சிந்தனைகளும் தெளிவுறுத்துகின்றன.

# பள்ளு இலக்கியங்களின் சமூகப் பின்புலம்

சி. பாக்கியராஜ்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் அந்தந்தக்கால மக்களின் பண்பாடு, பழக்க வழக்கம் போன்றவற்றை அறியத் துணைபுரிபவை. இவற்றின் அடிப்படையில் சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரை பல்வேறு வடிவங்களையும் பாடுபொருளையும் கொண்ட இலக்கிய வகைகள் தோன்றின. இலக்கியங்கள் அறிவித்தல், அறிவூட்டல். இன்பமூட்டல் எனும் மூவிதப் பண்புகளை உடையவை. அவற்றுள் சிற்றிலக்கியங்கள் இன்பமூட்டுவதைப் பெரும்நோக்கமாகக் கொண்டு தோன்றின எனலாம். சிற்றிலக்கியங்களில் ஒன்றான பள்ளு இலக்கியம் உழவர்களின் வாழ்க்கை முறையினையும் சமூகச்சூழலையும் வெளிப்படுத்துவனவாக அமைகிறது. இப்பள்ளு இலக்கியங்கள் வெளிப்படுத்தும் பள்ளர்களின் சமூகச்சூழல், சாதி, பொருளாதாரம், வாழ்க்கைமுறை ஆகியவற்றை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### பள்ளு நூலின் தோற்றம்

சங்கம் மற்றும் இடைக்கால இலக்கியங்களில் மருதநில மக்களான பள்ளர்கள் மறவர்களாகவும் தலைமக்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். அம்மக்கள் பிற்காலத்தில் ஆட்சி, அதிகாரம் மற்றும் நிலங்களை இழந்து, சமுதாய நிலையில் இழிவுபடுத்தப்பட்டு 'பள்ளர்கள் என அழைக்கப்பட்டார்கள் எனக் கருத வாய்ப்புள்ளது. உடைமைகளை இழந்த பள்ளர்கள் நில உடைமையாளர்களான பண்ணைக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருந்த நிலங்களை உழுது, பயிரிட்டு வேலை செய்து வந்ததைப் பாடுவதாகப் பள்ளு நூல்கள் அமைந்துள்ளன எனலாம் பள்ளு இலக்கியங்களின் தோற்றம் குறித்து ந.வீ செயராமன் "பள்ளு இலக்கியம் பல்வேறு மூலங்களைக் கருவாகக்கொண்டு கி.பி. 16ஆம் நூற்றாண்டில் முதன்முதலாகத் தனியொரு

சிற்றிலக்கியமாக உருப்பெற்றது" எனப் பள்ளு இலக்கியம் என்ற நூலில் குறிப்பிடுகிறார். ஆனால் நா. வானமாமலை, "பள்ளுப்பாட்டு இன்று நமக்குக் கிடைக்கும் கதையமைப்போடும் செய்யுள் அமைப்போடும் 17 – ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்ததில்லை என்பது உண்மையே, ஆனால், 17ஆம் நூற்றாண்டில் திடீர் என்று, இது முளைத்து விட்டதென்று சொல்ல முடியாது. பல சிறறோடைகளாக மலைச்சாரலில் ஓடிவரும் நீர்ப் பகுதிகள் சமவெளியில் கலந்து ஆறாகப் பெருகுவதைப் போல உழவர் வாழ்க்கையில் உயிரோடு உலாவிவந்த நாட்டுப் பாடல்களும் கூத்துமே பள்ளுப் பாட்டு உருவாகக் காரணமாக இருந்திருக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

இவர்களின் கூற்றின் அடிப்படையில் ஆராயும் போது பள்ளு இலக்கியம் 16 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தோன்றியிருக்கலாம் எனக் கருதலாம்.

## சமூகச் சூழல்

பள்ளு இலக்கிங்களை மேலோட்டமாகப் பார்த்தால் பள்ளர், அவருடைய இரு மனைவியரான மூத்தபள்ளி, இளையபள்ளி மற்றும் பண்ணைக்காரன் ஆகிய கதை மாந்தர்களை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டது போலவும், அவை பள்ளர்களின் வாழ்க்கை மரபுகள், சமயமரபுகள், பண்பாட்டு மரபுகள் மற்றும் வேளாண்மை மரபுகளைப் பாடுபெருளாகக் கெண்டிருப்பதைப் போலவும் தோன்றும். ஆனால், பள்ளு இலக்கியங்களைச் சமூகவியல் நோக்கில் ஆராய்ந்தால் பொருளாதார மற்றும் சாதி அடிப்படையில் அம்மக்களை இழிவு செய்யும் நோக்கில், அன்றைய ஆளும் வர்க்கத்தினரின் சார்பு இலக்கியமாகப் பள்ளு இலக்கியம் பாடப்பட்டுள்ளன எனக் கருதவும் வாய்ப்புள்ளது.

## பண்ணைக்காரன்

பள்ளு இலக்கியங்கள் பண்ணைக்காரனை மேற்பார்வையிடும் அதிகாரியாகவும், நிலப்பிரபுகளின் ஏவலனாகவும், பண்ணையின் தலைவனாகவும் விங்குபவன், பள்ளர்களுக்கு வேலை தருவதால் 'பண்ணையார்' என்று பள்ளர்கள் அழைக்கப்படுவர் பண்ணைக்காரன் ஆவார்.

*"நான் உனைப் போற்றவும் நீயெனைக் காக்கவும் நாய்அடியேன்*
*தான் உனைப் போலும் ஒருமுதலோ நன்மை தந்துபுரப்*
*பானும்நை வாயெனச் செய்வானும் நீ"* (திருமலை முருகன் பள்ளு – பா. 92)

எனும் பாடலில் பள்ளர்கள். பண்ணையாரைப் புகழ்வது போல் இடம் பெறுகிறது. தனது உழைப்பை வாங்கும் பண்ணைக்காரன் அருகில் இருக்கும் போது. கடவுள் போல் எங்களைக் காப்பதால், உங்களுக்கு அடிமையாக இருப்போம் எனப் பள்ளர்கள் பாடுவதாக இப்பாடல் அமைகிறது. ஆனால்,

*"மாறு கண்ணும் பருத்திப்பையின்*
*கூறைவயிறும் – கீரை*
*மத்துப்போல் தலைவும் சுரை*
*வித்துப் போல் பல்லும்*
... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... (முக்கூடற்பள்ளு – பா. 53)

என்ற பாடலில் பண்ணையாளரைப் பார்வைக்கோணம் மாறிய கண்ணும், பருத்திப் பஞ்சினை அடைத்ததைப்போல் வயிறும், மத்துப் போல் வழுக்கையும், அவரைவிதை பல்லும், நீர்த்துப்போன சளிவழியும் மூக்கும் உடையவன் என்று பண்ணையாரைக் கேலி செய்துள்ளார்கள். இச்செயல்களை உளவியல் ரீதியாக ஆராயும் போது பண்ணையார் அருகில் இருக்கும்போது புகழ்வதும், பின்பு கேலி பேசுவது போல இகழ்வதும் அடக்குமுறையின் வெளிப்பாடே எனலாம்.

## சாதி

தமிழ்ச்சமுக அமைப்பில் அரசியல் மாற்றம் காரணமாக ஆதிக்கச் சாதியினர். பள்ளர்களை ஒடுக்குமுறைக்கு ஆளாக்கினர் என்பதை,

*"பக்கமே தூரப் போயும்*
*தக்கசோ றென்வே ணாண்மை*
*பள்ளா பள்ளா என்பார் மெய்*
*கொள்ளாதவர்"* (முக்கூடற்பள்ளு – பா.15)

என்ற வரிகள் மூலம் அறியலாம். இப்பாடலில் உயர்சாதியினர்

வசிக்கும் இடம் மற்றும் அவர்கள் சூழ்ந்திருக்கும் இடத்திற்குச் சென்றால் பள்ளா தூரம் போ" என்று கூறியிருப்பதை உணர்த்துகிறது.

மேலும், 'தூரம் போ' என்று கூறும் உயர்சாதியினர் அவர்கள் உண்ணும் நெல் பள்ளர்கள் உருவாக்கியது என்ற எண்ணம் மறந்துவிட்டதை உணர்த்துவதாகக் கீழ்க்காணும் பள்ளர் கூற்றாக அமைந்த பாடல் தெளிவுபடுத்துகிறது.

*"......... நானே*
*ஏரு விட்டுழவுழுது*
*நான் பயி ரேற்று – நெல்லே*
*இல்லாமல் ஆர் பிழைப்பார்*
*சொல்லுவீர் ஆண்டே"* (செண்பகராமன் பள்ளு – பா. 13)

இதன்மூலம், உடல் உழைப்பைப் போற்றாத உயர் சாதியினரின் சாதிக் கட்டுப்பாட்டை எதிர்த்து பள்ளர்கள் கலகக்குரல் எழுப்பியதை அறிய முடிகிறது.

## பள்ளர்கள்

சமூக அமைப்பில் பள்ளர்கள் பொருளாதாரத்தில் சிறப்பு வாய்ந்தவர்களாக விளங்கியுள்ளார்கள். தன் வாழ்நாள் முழுவதும் வயல்களில் வேலை செய்து. உடல் அளவிலும் பழக்க, வழங்கங்களின் அடிப்படையிலும் மாறுபட்டுக் காணப்பட்டதால் அவர்களின் பெருமைகளைக் கூறுவதுபோல் இழிவுபடுத்தி இலக்கியம் படைத்துள்ளதை 'சு. வெங்கடராமன் மள்ளர் மரபுகள்' என்ற நூலில்

*"பள்ளு நூல்கள் பள்ளர்களை ஏசி இழிவுபடுத்தி ஆட்சியாளர்களை, அதிகாரவர்க்கத்தினரை மகிழ்ச்சியுறச் செய்வதற்காகப் புலவர்களால் பரிசிலுக்காகப் பாடப்பட்டன. இருந்தும் தெரிந்தோ தெரியாமலோ அல்லது மறைபொருளாகப் பள்ளர்களின் சிறப்புமிக்க வரலாறுகளையும் பெருமைகளையும் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளனர்"*

எனக் கூறுகிறார். மேலும், கட்டிமகிபன் பள்ளில் ஏழர்க்குடும்பனார் தன் குலப் பெருமை கூறுமிடத்து பள்ளரின் குலப்பெருமைகளை வரிசைப்படுத்துகிறார். நெற்பயிர் விளைவித்து தானம், தருமம் செய்து ஓங்கு புகழ் தரித்து வரும் குலம்; உழவு செய்யும் நுகம், ஏர், மேழி, முதலியன

கொடுத்து அவர்களை மேன்மையுறச் செய்த குலம்; சூழ்ந்து போர் செய்யும் தானைகளை உடைய மன்னர்களுக்குப் போர் மறவர்களாக அதிகம் உள்ள குலம், படையை ஆதிக்கம் செலுத்தும் குலம்; படை வகைகளைப் போர் முறைகளை வகுக்கும் குலம் தேவேந்திரப் பள்ளர் குலம் என்கிறார். இதை.

*"தலைக்குஞ் சராசரமு முளைக்கும் நெல்முளை கொண்டு*
*தருமம் புவியோங்கியே தரிக்கச் செய்தேன்*
*கிளைக்குந் தினத்திலொரு தினத்துக்கு மூங்கப்போர்*
*கீர்த்தியுடன் கொடுத்து மேட்டிமை செய்தேன்*
*வளைக்குந் தானை மன்னவர்க் கதிகப்படையாதிகம்*
*வகுக்கும் மதி தேவந்திரப் பள்ளனும் நான்"* (கட்டிமகிபன் பள்ளு – 13)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

## பொருளாதாரம்

'பள்ளர்கள்' பொருளாதாரத்தில் செழித்திருந்தனர் என்பதற்குப் பள்ளு இலக்கியம் சான்றாக அமைகின்றது.

குருகூர்ப் பள்ளுவில் பள்ளர்கள், மேழி, நுகம், கொழுவு, ஏர்க்கால், கயிறு, உழுக்கோல், கலப்பையுடன் மாணிக்கத்தால் படைவாரும், பொன்னோர் பூட்டுவதற்குத் தங்கத்தாலான கொழுவையும், சந்தன மரத்தாலான மேழிநுகமும், மரகதத்தனால் செய்யப்பட்ட உழுக்கோலும் பயன்படுத்தினர் என்பதை,

*"சந்தனத்தா லுந்துமேழி நுகமும் பொங்கு*
*தங்கத்தின் செய்தனமைந்த துங்கக் கொழுவுஞ்*
*சுந்தரஞ்சேர் செந்துகிரேர்க் காலுஞ் சாலச்*
*சுடர்விடு மாணிக்கத் தாற்படை வாரும்*

*இந்துவன்னம் வந்தபட்டுக் கயிறும் கதி*
*ரேய்ந்தமர கதந்தாலே வாய்ந்த வுழுக்கோலும்*
*அந்தமுறை செந்தமிழ்தே ராழ்வார் பண்ணைக்*
*கையாயிரம் பலப்பை மெய்யாகக் கொணர்ந்தே"*

(குருகூர்ப்பள்ளு – பா.57)

என்ற பாடல் விளக்குகிறது. பள்ளர்களின் செல்வச் செழிப்பை இதன்மூலம் அறியலாம். 'திருமலை முருகன் பள்ளுவில் இளைய பள்ளியின் தாய் வழியினரும் தந்தை வழியினரும் தென்னாரி நாட்டில் சொந்தமாகப் பண்ணை வைத்து விவசாயம் செய்து வந்தவர்கள் என்ற செய்தி தெரிகிறது. மேலும், பள்ளர்கள் அனைவரும் பண்ணையாட்கள் என்கிறவர்கள் என்ற கூற்று 'பொய்' என்பதைக் கீழ்வரும் பாடல்மூலம் அறியலாம்.

*"பைந்தமிழ் நன்னகர் தன்னிற்*
*சொந்தமாக வைத்த பண்ணைப்*
*பள்ளர் எங்கள் தாய் வழியும்*
*தந்தை வழியும்*
*இந்தத் திருமணப் பண்ணான்*
*வந்தென்னைச் சரத் செய்தே"* (திருமலை முருகன் பள்ளு – 14)

செங்கோட்டுப் பள்ளு' வில் பள்ளர்கள் செல்வந்தர்களாகத் தாழ்ச்சி இல்லாமல் வாழ்ந்தார்கள் என்பதை.

*"உள்ளவர் என்றும் தாழ்ச்சி*
*ஒன்றும் இல்லாமல் எங்கும்*
*மன்னர்கள் செல்வமாக*
*வாழ்ந்தவர் இருக்கும்போது"* (செங்கோட்டுப் பள்ளு, பா. 143)

என்ற பாடலும்

*"பைம் பொருள் மணியாபரம் மெத்தப் பூட்டி இரு*
*பங்கயக்கை மீதினில் தம்பூரும் மீட்டி"* (செங்கோட்டுப் பள்ளு – பா.39)

என்ற பாடலும் உணர்த்துகின்றன. மெலும்,

'செண்பகராமன் பள்ளுவில் இளைய பள்ளியின் தந்தை பரம்பரையாகச் சொந்தமாகப் பேருழவு செய்து வருபவர் என்பதை.

*"தியாகன் குமரியூரில்*
*செய் விளங்க*
*அகவாரிசம் மலந்து*

*வெகு பேருழவு கண்ட*
*அன்றைக்கும் மின்றைக்கும்*
*மென்றைக்குமே*
*மகராசன் புண்ணியத்தால்*
*வெகு பேருபூவுப் பள்ளன்*
*மகனாகி நாட்டுத்தெய்வாம்*
*புகழானவன்"* (செண்பகராமன் பள்ளு - பா.17)

என்ற வரிகளும் விளக்குகின்றன. மேலும், கஞ்சமிச்செட்டிப் பள்ளு (பா.31), வையாபுரிப் பள்ளு (பா.119, 120), கதிரை மலைப் பள்ளு (ப. 3, 52, 101), கேட்டூர் நாயினார் பள்ளு (126 - 127) போன்ற பள்ளு இலக்கியங்கள் மூலம் பள்ளர்கள் செல்வச்செழிப்புடன் வாழ்ந்தார்கள் என்பது தெரியவருகின்றது.

சமுதாயத்தில் பள்ளர்கள் மேல்வர்க்கத்தினர்க்குச் சமமாக வாழ்ந்தனர். இருப்பினும் அன்றைய ஆளும் வர்க்கத்தினர் உழுவித்துண்ணும் வேளாண் மக்களான மள்ளர்களை நிலவுடைமைகள் இழந்து உழைக்கும் மக்களாக மாற்றினார்கள். சமூக உறவுமுறையில் சாதி அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டுப் பொருளாதாரத்தில் நலிவுற்றுக் கீழ் வரிசையில் தள்ளப்பட்டனர் என்பதைப் பள்ளு நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

## முடிவுரை

பள்ளர்களின் சமூக மரபுகள் மேல் - கீழ் என்னும் சாதி வரிசை அடிப்படையிலும், நிலவுடைமைச் சமூகப் பொருளாதார அடிப்படையில் ஆண்டான் அடிமை உறவு நிலையிலும் பள்ளு இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. அதிகார வர்க்கத்தினரான பண்ணையார்கள், ஆதிக்கச் சாதியினரின் அதிகார மையத்தை முன்னிறுத்திக் கொண்டு, புலவர்கள் அவர்களிடமிருந்து பரிசைப் பெறுவதற்காகப் பள்ளுப் பாடினர். மாறாகத் தொழிலாளி நிலையிலிருந்து பள்ளர்சமூக மக்களிடம் அனுதாபமோ, பரிவோ, கொண்டு பள்ளு இலக்கியம் படைக்கப்படவில்லை எனலாம். மேலும், சமூகச் சூழல், பொருளாதாரம் வாழ்க்கை முறையில் மேல் நிலையில் இருந்த மருதநில மக்களே, சமூக அரசியல் மாற்றத்தின் காரணமாகப் 'புள்ளர்' என்ற நிலையை அடைந்தனர் எனக் கருதலாம்.

# குறுந்தொகையில் பாடுபொருள்கள்

வெ. சஞ்சீவராயன்
தருமபுரி

## முன்னுரை

திறனாய்வாளர்கள் வரையறுக்கும் செவ்வியல் பண்புகளுள் ஒன்று பாடுபொருளாகும். பழைய இலக்கியங்களின் பாடுபொருள் சிறப்பை நோக்கிச் செவ்வியல் தன்மைகளில் இதனையும் ஒன்றாக அடக்கிக் கூறினர். இப்பொருள் அமைப்பதிலும் வெளிப்படுத்துவதிலும் சங்க இலக்கியங்கள் உலக இலக்கியங்களைக் காட்டிலும் வேறுபட்டுத் தனித்து நிற்கின்றன. அக இலக்கியங்கள் அனைத்தும் ஒரே விதமான பாடுபொருளைப் பெற்றன போலக் காணப்படினும் நுட்பமாக நோக்கும்போது, ஒவ்வொரு செய்யுளும் வேறு வேறு வகைப்பட்ட பாடுபொருள்களைக் கொண்டனவாக விளங்குதலை அறியலாம். எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகையே இதற்குச் சான்றாகும்.

### பாடுபொருள் விளக்கம்

புலவன் பாட்டில் நிலைநிறுத்தும் பொருள்தான் பாடு பொருளாகும். இது உள்பொருளாக இருத்தல் சிறப்புடையது. தொல்காப்பியர் இதனை, 'யாப்பு' எனக் குறியீடு செய்கிறார். இவ்யாப்புச் செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகும். ' எழுத்து முதலா ஈண்டிய அடியில், குறித்த பொருளை முடிய நாட்டல்'1 என அவர் இதற்கு விளக்கம் தருகிறார். 'குறித்த பொருள்' என்பதுதான் இங்குப் பாடு பொருளாகும். இதனால் எழுத்து, அசை, தளை, சீர், அடி என்னும் செய்யுள் உறுப்புக்களில் தொடர்ந்து வருமாறு புலவர்களால் அமைக்கப்படும் பொருள்தான் பாடுபொருளாகும் என்பது பெறப்படும்.

*"துகள்தீர் பெருஞ்செல்வந் தோன்றியக்கால் தொட்டுப்*
*பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க*
*அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்*
*சகடக்கால் போல வரும்"*

இதனுள், செல்வ நிலையாமை என்னும் பாடுபொருள் ஒவ்வோர் அடியிலும் தொடருமாறு வைக்கப்படுவதைக் காணலாம்.

**மையக் கருத்தும், துணைக் கருத்தும்**

பாடுபொருள் ஆங்கிலத்தில், "Theme" என வழங்கும். இக்காலத் தமிழில் இதனைக் தலைமைக் கருத்து அல்லது மையக்கருத்து என்பர். தலைமைக் கருத்து மட்டுமே பாடுபொருளாகாது எனத் திறனாய்வாளர்கள் தெளிவுபடுத்துகின்றனர். மையக்கருத்தோடு பல துணைக் கருத்துக்கள் இணைய வேண்டும். அப்பொழுதுதான் முழுமையான பாடுபொருளாய் ஏற்கமுடியும் என்பது அவர்கள் கொள்கையாகும்.

வீரத்தைத் தலைமைக் கருத்தாகத் கொண்ட புறநானூற்று இலக்கியம் அதனோடு சேரும் வகையில் கொடை, கல்வி, நிலையாமை, மானம், அன்பு, விருந்தோம்பல், ஒருமைப்பாடு என்பனவாக வரும் பல்வேறு துணைக் கருத்துக்களுக்கும் இடம் கொடுத்து நிற்கிறது, இவ்வாறே, பழைய இலக்கியங்கள் ஒருதலைமைக் கருத்தின் கீழ்ப் பல துணைக் கருத்துக்களைப் பெற்றுப் பாடுபொருள் அமைப்பில் சிறந்து விளங்குகின்றன.

செய்யுளில் உணர்ச்சியும் கற்பனையும் இன்றியமையாத பங்கு வகிக்கின்றன. எனினும், அவற்றைக் காட்டிலும் மையக்கருத்து என்னும் பாடுபொருள் தலைமை பெறுகின்றது. உணர்ச்சியே மிகுந்து வரும் பாட்டில் கூடக் கருத்துக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. 'அற்றைத் திங்கள்' எனத் தொடங்கும் பாரிமகளிர் பாடல் இதற்கு எடுத்துக்காட்டாகும். அழுகை உணர்ச்சி முழுதும் விரவி நிற்கும் இச்செய்யுளில் தந்தையை இழந்து வாடும் தங்கள் கையற்ற நிலையை அம்மகளிர் தெளிவாகப் புலப்படுத்துகின்றனர்.

"இலக்கியக் கலைஞர் உணர்ச்சி, கற்பனை முதலியவற்றுக்கு முதன்மை தராது, கருத்துக்கே முதன்மை இடம் தந்து கலையைப்படைப்பதுண்டு. இவ்வாறு படைக்கும் போது உணர்ச்சி, கற்பனை, கலையழகு ஆகிய அனைத்தையும் கடந்து குறிப்பிட்ட அந்தக் கருத்தே நம் உள்ளத்தை வேகமாகத் தாக்கி வேரூன்றி நிற்கும்" எனப் பாடுபொருளாகிய மையக்கருத்துப் பெறும் முதன்மை நிலையைச் சுட்டுகிறார் சு. பாலசந்திரன். அவர் தண்டியலங்காரம் கூறும் காப்பியப் பண்பாகிய பாவிகத்தோடு மைய்க் கருத்தைப் பொருத்தி விளக்குவர்.

### உயர்ந்த பொருள்

பாடுபொருள் உயர்ந்ததாக இருத்தல் வேண்டும்; தாழ்ந்ததாக அமையக் கூடாது. 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை' என்னும் உவமவியல் நூற்பா இங்கு ஒருபுடை கருதத்தக்கது. உயர்வு என்பது பண்பை நோக்கியது. விழுமிய குணங்களைப் பாடுபொருளாக்கும் போது, இப்பாடுபொருளைக் கொண்ட இலக்கியம் சிறந்த இலக்கியமாகிறது. உயர்ந்த பாடுபொருளை நிலைநிறுத்துவதைத் தமிழின் தொன்மை இலக்கியங்கள் பேணி வந்தமை பாராட்டத்தக்கது என்கிறார் செ. சாரதாம்பாள்.

### முதன்மைப் பாடுபொருள்கள்

காதலையும், வீரத்தையும் விரிவான பாடுபொருள்களாய்க் கொண்டவை சங்க இலக்கியங்களாம். காதல் இலக்கியங்கள் அகம் என்ற ஒரு பெரிய தலைமைப் பாடுபொருளைப் பெற்று நிற்கின்றன. அகநூல்களில் முதல் கரு உரி என்னும் மூன்றும் இன்றியமையாப் பாடுபொருள்களாதல் வேண்டும் என்பது விதி. இவை முதன்மைப் பாடுபொருள்களாகும்.

இம்முப்பெரும் பொருள்களுக்குத் துணை செய்யும் வகையில் ஏனைப் பாடுபொருள்கள் இடம்பெறுகின்றன. இவை துணைப்பாடுபொருள்களாம். குறுந்தொகை உரிப்பொருளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் அதற்கேற்றவாறு இந்நூலில் வேறுவேறு பாடுபொருள்கள் அமைகின்றன. சில பாடல்களைத் தேர்ந்து திறனாய்வு செய்வதன் வாயிலாக இவற்றை அறியலாம்.

## சிறப்புப் பாடுபொருள்கள்

குறுந்தொகையில் சிறப்புப் பாடுபொருள்களாகத் தெரிய வருவன :

1. தலைவனுடைய பெருமையும் உரனும், 2. தலைவனுடைய ஈர நெஞ்சு, 3.தலைவியின் நாற்குணப் பண்பு, 4. தலைவியின் கற்புடைமை, 5. தோழியின் அறிவாற்றலும் செயல்திறனும், 6. பாங்கன் முதலான வாயில்கள் நிலை, 7. பரத்தமைச் செய்திகள், 8. அஃறிணை உயிர்களின் பண்புகளும் செயல்களும், 9. ஐந்நில மாந்தர் வாழ்க்கை முறை என்பன.

இவையே அன்றி எல்லா நூல்களுக்கும் உரிய பொதுவான பாடுபொருள்களான அன்பு, ஒப்புரவு, வாய்மை, கண்ணோட்டம், ஈகை, விருந்தோம்பல், செய்ந்நன்றியறிதல் ஆகியனவும் இத்தொகைநூலுள் காணப்படுகின்றன. சில பாடல்கள் திருக்குறளைப் போன்று அறத்தைப் பாடுபொருளாகக் கொண்டு விளங்குகின்றன. மேற்சுட்டிய பாடுபொருள்களில் முதல் பாடுபொருளும் மூன்றாது பாடுபொருளும் பாடல்களில் இடம்பெற்ற முறைமை குறித்து இவண் ஆராயப்படுகிறது.

**பெருமையும் உரனும்**

ஆடவருள் தலைமைக் குணம் உடையவன் தலைவன் எனப்படுகின்றான். அகநூல்கள் காட்டும் கிளவித்தலைவன் பெருமையும் உரனும் மிக்கவனாய்த் திகழ்தல் வேண்டும் என்று தொல்காப்பியம் கூறுகிறது. பழிக்கும் பாவத்துக்கும் அஞ்சுதல் பெருமையாகும். உரன் என்பது அறிவாகும். மனத்தால் நன்மை தீமைகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து தீமையில் செல்லாது நன்மையிடத்துத் தன் பொறி புலன்களைச் செலுத்துவதுதான் அறிவின் இலக்கணமாகும்.

அகப்பொருள் தலைவன் களவொழுக்கத்திலேயே இன்பம் காண நினையாது, தலைவியை விரைவில் ஊரறிய வரைந்து கொள்ள எண்ணுவான். இது பழி பாவங்களுக்கு அஞ்சுதலாகும். களவொழுக்கம் அளவுக்கு மீறினால் அது தலைவிக்கே தீமை பயக்கும். அக்களவு வெளிப்பட்டு ஊர்மக்கள் அலர் தூற்றுவர்.ஆகவே, காலம் தாழ்த்தாது அவளை வதுவை புரிய எண்ணி அதற்கான செயல்பாடுகளை மேற்கொள்வான். இது அறிவாகும். ஆக, இவ்விரண்டும் வாய்ந்தவனாக விளங்கும் தலைவன், தன் கூற்றினாலோ அல்லது தலைவி தோழி என்போர் தம் கூற்றுக்களினாலோ இவற்றை வெளிப்படுத்தும் வகையில் தன் தலைமைக் குணம் தோன்ற அகப்பாடல்களில் காட்சியளிப்பான்.

வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிந்த தலைவனது பிரிவிற்காகப் பெரிதும் வருந்திய தலைவியை ஆற்றுவிக்கும் தோழி, தலைமகன் ஆடவர்க்கே உரிய பெருமைப் பண்புடையவன் என்றும், ஆதலால், விரைவில் திரும்பி வந்து அவளை வரைந்து கொள்வான் என்றும் எடுத்துரைத்து அவள் வருத்தத்தை மாற்றுகிறாள். 'மகளிரை எவ்வகையாலும் துன்பம்

செய்யக்கூடாது; அச்செய்கை பழியை உண்டாக்கும்' என்று முன்னோர் வகுத்த அறநூல் விதியை அவன் நன்கறிந்தவன்; எனவே, பெண்பாலான தன் காதலி நெஞ்சம் நோகும்படியான நடத்தையை அவன் உறுதியாக மேற்கொள்ள மாட்டான் எனத் தோழிக் குறிப்பாகத் தலைவன் பழிக்கு அஞ்சும் இயல்புடைமையைத் தலைவிக்குப் புலப்படுத்தி அவளைத் தேற்றுவிக்கிறாள். இப்பாடுபொருள்,

*"அழிய லாயிழை யழிபுபெரி துடையன்*
*பழியு மஞ்சும் பயமலை நாடன்*
*நில்லா மையே நிலையிற் றாகலின்*
*நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சின்*
*கடப்பாட் டாளன் உடைப்பொருள் போலத்*
*தங்குதற் குரிய தன்றுநின்*
*அங்கலுழ் மேனிப் பாய பசப்பே"*

என வரும் பாடலில் வெளிப்படுத்தப்படுகிறது.

தலைவியைப் பிரிந்து வந்ததனால் அவள் உள்ளம் துயருறச் செய்து விட்டோமே என்று தலைவனும் பெரிதாக வருந்தினான் என்பதை, 'அழிபு பெரிதுடையன்' என்னும் தொடர் காட்டுகிறது. ஆதலின், இவ்வருத்த மிகுதியும், பழிக்கு அஞ்சும் உயர்ந்த பண்பும் விரைவில் அவனைத் தலைமகளிடத்தே கொண்டுவந்து சேர்க்கும் என்று உணர்த்தப்படுகிறது. மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் பாடியது இப்பாட்டாகும்.

**தலைவியின் நற்குணப் பண்பு**

அக இலக்கண நூல்கள் கிளவித் தலைமக்களுக்குத் தனித்தனிப் பண்புகளை வரையறுத்துக் கூறுகின்றன. தலைவனுக்கு உரியனவாய்ப் பெருமையும் உரனும் பண்புகளாகச் சுட்டப்படுதல் போலத், தலைவிக்கு உரியனவாய் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என நால்வகைப் பண்புகள் காட்டப்படுகின்றன. இவை பேதை தொடங்கிப் பேரிளம்பெண் ஈறாக உள்ள எல்லாப் பருவங்களிலும் எப்பொழுதும் பெண்களுக்கு உரியன.

*"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்*
*நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப"*

எனத் தொல்காப்பியர் மகளிர்க்கு இக்குணங்கள் அமையவேண்டுவதன் இன்றியமையாமையை வலியுறுத்துகிறார்.

மூன்று குணங்கள் மட்டுமே இங்குக் கூறப்பட்டாலும், 'முந்துறுதல்' என்னும் சொல்லால் பயிர்ப்பு, பேதைமை, நிறை ஆகியனவும் கொள்ளப்படும். முன்பு காணாதவற்றைக் 'காணும்போது அவற்றை மனத்தில் ஏற்காமை பயிர்ப்பாகும். கணவன் அல்லாத அயல் ஆடவனது உடல், உடை முதலியன தன்மேனிமீது படும்போது உண்டாகும் அருவருப்பே பயிர்ப்பு எனச் சொல்வதுண்டு. பேதைமை என்பது செய்யத் தகுவதை அறியாத அறியாமையாகும். நெஞ்சினை நேர்வழி நிறுத்தல் நிறையாகும். மொத்தம் ஆறு குணங்கள் சுட்டப்பட்டாலும் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களே இலக்கண, இலக்கியங்களில் முக்கியத்துவம் பெறுகின்றன. தலைவன்மீது தலைவிக்கு எழும் வேட்கையைக் கட்டுப்படுத்துவனவாய் இவை அமைகின்றன.

அகப்பாடல்களில் இடம்பெறும் கிளவித் தலைவியர் அனைவரும் மேற்சுட்டிய நாற்குணங்கள் நிரம்ப உடையராய் விளங்குகின்றனர். இவை இவர்களிடம் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ தென்படுகின்றன. இப்பண்புகள் தலைவி கூற்றிலோ, தோழி கூற்றிலோ நின்று வெளிப்படுகின்றன. குறுந்தொகையில் அறியப்படும் கிளவித் தலைவியர் கூற்றுரைத்தலில் வேறுபட்டாலும், அச்சம் முதலான குணங்களைப் புலப்படுத்தும் நெறியில் ஒன்றுபோலவே காணப்படுகின்றனர்.

புலவர்கள் தலைமகளிர் பற்றிய செய்திகளை எடுத்துரைக்கும் இடங்களில் எல்லாம் இப்பண்புகள் இவர்களுக்கு உரியனவாமாறு இவற்றைப் பாடுபொருள்களாக அமைக்கின்றனர். இந்நால்வகையான குணங்களினின்று தலைவியைப் பிரித்துச் சாதாரணப் பெண்மகளைப் போல அவளைக் கற்பனை செய்ய இயலாமைதான் இதற்குக் காரணமாகும். மேலும், இந்நான்கு பண்புகளில் ஏதேனும் ஒன்று நிரம்பியவளாக அவசியம் படைத்துச் காட்ட வேண்டும் என்பது புலனெறி வழக்கின் நியதியாக உள்ளது.

## நோன்புகள்

கற்புக்காலத்தில் பிரிந்து சென்ற தலைவன் விரைவில் மீண்டுவரல் வேண்டித் தலைவி கடன் பூணல், கைந்நூல் யாத்தல், நிமித்தம் பார்த்தல்,

நற்சொல் கேட்டல் ஆகிய செயல்களை மேற்கொள்ளல் உண்டு. இவை ஒரு வகையான நோன்புகளாம். கடன் பூணல் என்பது கொற்றவையையும் முருகக் கடவுளையும் வழிபடுதலாகும். கைந்நூல் யாத்தல் என்பது நோன்பு நோற்கும்போது கையில் காப்புநூல் அணிவதாகும். நிமித்தம் பார்த்தல் என்பது சகுனம் பார்த்தல் ஆகும். நற்சொல் கேட்டலாவது விரிச்சியாகும்.

## பயிர்ப்புக்குணம்

இந்நான்கு செயல்களும் கற்புடைய மகளிரால் பொதுவாக மேற்கொள்ளப்படினும், இவற்றை அவர்கள் தங்களுக்குத் தொடர்பில்லாத அந்நியமாகவே கருதுவர். பயிர்ப்புக் குணமிக்க பெண்டிர் இவற்றின் வாயிலாகத் தம் தலைவரைப் பெறுதற்குச் சிறிதும் விரும்பமாட்டார். தலைவன் தன் மீது வைத்த அன்பு ஒன்றே விரைவில் அவனைத் தன்பால் கொண்டுவந்து சேர்க்கும் என்பது தலைவியின் உறுதியான எண்ணமாகும். அவ்வெண்ணத்திற்கு மேற்சுட்டிய கடன்பூணல் முதலியவை இழுக்குண்டாக்கும். மேலும், ‘இன்ன பருவத்தில் திரும்பி வருவேன்’ என்று தலைவன் பிரிவின்போது கூறிய வார்த்தைக்கு அவமதிப்பு நேரும் வகையில் அவள் இத்தகு புறம்பான செயல்களைச் செய்ய எக்காலத்திலும் ஒருப்படமாட்டாள்.

தலைவன் மீண்டும் வரும் வரையில் பிரிவுத் துயரை ஏற்றுப் பொறுமையோடிருக்கவே விரும்புவர். இவ்வாறான செயல்கள் தலைமகனைப் பற்றிய நினைப்பை மாற்றித் தம்மீதே கவனத்தைத் திருப்பிவிடும் வன்மை வாய்ந்தவையாதலின், பயிர்ப்பின் காரணமாக இவற்றை மனத்தால் எண்ணுவதற்கும் மறுப்பர். குறுந்தொகையில் காணும் தலைவி ஒருத்தி இத்தகு பண்புடையவளாக விளங்குகின்றாள்.

*"விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்*
*கடனும் பூணாம் கைந்நூல் யாவாம்*
*புள்ளு மோராம் விரிச்சியு நில்லாம்*
*உள்ளலு முள்ளா மன்றே தோழி*
*உயிர்க்குயி ரன்ன ராகலின் தம்மின்*
*றிமைப்புவரை யமையா நம்வயின்*
*மறந்தாண் டமைதல் வல்லியோர் மாட்டே"*

இதனுள் தலைவி கொற்றவையைப் பரவுதல், காப்பு நூலணிதல், நிமித்தம் பார்த்தல், விரிச்சி கேட்டல் ஆகியவற்றை நெஞ்சினால் நினைக்கவும் ஒருப்படாத தன் பயிர்ப்புக் குணத்தைப் புலப்படுத்துல் உணரத்தக்கது. 'உள்ளலும் உள்ளாம்' என்னும் தொடர் இதனைத் தெரிவிக்கிறது. 'மனத்தால் நினைத்துப் பார்க்கவும் மாட்டேன்' என்பது இத்தொடரின் பொருளாகும். அதற்குக் காரணத்தை பின்னுள்ள அடிகளில் எடுத்தியம்புகிறாள்.

' தலைவன் தனக்கு உயிருக்கு உயிராகத் திகழ்வதால், இமைக்கும் பொழுதுகூட அவனின்றித்தான் உயிர் வாழாத தன் நிலையை அவன் உறுதியாக அறியவே செய்வான். எனவே, அவன் விரைவில் தன்னை நாடித் திரும்பி வருவது நிச்சயமாதலின் கடன்பூணல் முதலான செயல்களால் தனக்கு ஒரு பயனுமில்லை என்று தோழிக்குத் தலைமகள் தெளிவாக விடையிறுக்கிறாள். இவையெல்லாம். தன் கற்புடைமைக்கு இழுக்குத் தருவன என்பது அவள் கருத்தாகும்.

சிலப்பதிகாரத்தில், சோமகுண்டத்திலும், சூரிய குண்டத்திலும் நீராடிக் காமவேள் கோட்டம் சென்று கை தொழுதலால் பிரிந்து சென்ற கோவலன் உடன் மீண்டு வருவான் எனக் கண்ணகிக்கு அவள் தோழி தேவந்தி அறிவுறுத்தியபோது, நிறைந்த பயிர்ப்புக் குணத்தின் விளைவாய்ப், 'பீடன்று' என்று அவள் மறுத்துத் தான் துயர் ஆற்றி இருந்தமை ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது. நுட்பமான பாடுபொருளுடைய இக்குறுந்தொகைச் செய்யுளை இயற்றியவர் கொற்றன் என்னும் புலவராவார்.

## முடிவுரை

தமிழன் செவ்விலக்கியங்களில் புற இலக்கியங்கள் பொதுவான பாடுபொருளைப் பெற்று நிற்கும். அப்பொருள்களைக் கண்டுணர்தல் எளிது. அக இலக்கியங்கள் சிறப்பான பாடுபொருளைப் பெற்று. நடக்கும். இதனை அறிதல் அரிது. இத்தகு அரிய பாடுபொருள்கள்தாம் மேற்சுட்டிய தலைவனுடைய பெருமை, தலைவியது நாற்குணப் பண்பு என்னும் இரண்டுமாம். இவ்விரு பொருள்களும் உயர்ந்தவையாய் இருத்தல் நோக்கத்தக்கது.

# அற இலக்கியங்கள் உணர்த்தும் கொல்லாமையும் புலால் மறுத்தலும்

இ. ரஞ்சித்குமார்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

உலக உயிர்கள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்தே வாழுகின்றன. உணவிற்காக ஒரு உயிர் மற்றொரு உயிரைச் சார்ந்து வாழுதலை, 'உணவுச் சக்கரம்' என்பர். மனித இன வளர்ச்சி இவ் உணவுச் சக்கரத்தின் அடிப்படையிலேயே அமைகிறது. நாகரிகம். பண்பாடு வளர்ந்த. நிலையில் மனித இனம் உணவிற்காகப் பிற உயிர்களைக் கொல்வதை வெறுத்தது. சமயத் தத்துவங்களும், மனித நேயமும் உயிர்களிடத்து அன்பு செலுத்தக் கற்றுக் கொடுத்தன. சமய வழிபாடுகளில் பலியிடுதலைக் கொண்டிருந்த மனித இனம் கொல்லாமையை வலியுறுத்தத் தொடங்குகிறது. கொல்லாமையைச் சமயத் தத்துவங்களின் பரப்புதலுக்கு அடிப்படையாகக் கொண்டனர் அல்லது சமய அடையாளத்துக்குப் பயன்படுத்தினர். தமிழ் உலகிலும் சமய நெறிகள் அனைத்தும் இவ்வுயிர்க் கொலையைக் கடிந்து பேசிக் கொல்லாமையை வலியுறுத்தின.

## கொல்லாமை - விளக்கம்

உணவிற்காகவோ பிற காரணங்களுக்காகவோ மனித இனம் பிற உயிர்களைக் கொலை செய்யாமல் இருப்பது கொல்லாமையாகும். 'கொல்லாமை' என்னும் சொல்லுக்குக் கொலை செய்யாதிருத்தல் என மதுரைத் தமிழ்ப் பேரகராதி பொருள் தருகிறது. கழகத் தமிழ் அகராதி, கொலை செய்யாமை எனப் பொருள் தரும். அந்தவகையில் நாகரிக வாழ்க்கையில் தன்னை இணைத்துக் கொண்ட மனித இனம் பிற உயிர்களிடத்து அன்பு செலுத்தத் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது. இவ்வலியுறுத்தல்களைச் சமயங்கள் கொல்லாமை என்னும் கருத்தாக்கத்தை முன்னிறுத்தித் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டன. சமணம், பௌத்தம், சைவம், வைணவம் போன்ற மண் சார்ந்த சமயங்களும், பிற நாட்டுச் சமயம் சார்ந்த தத்துவங்களும் இக்கொள்கையை முதன்மைப்படுத்தியுள்ளன.

'கொல்லாமை' என்பது பிற உயிர்களைக் கொல்லாது இருத்தல் மட்டுமல்லாது அவ்வுயிர்களைப் பேணுதலுமாகும் என்பது இதனால் பெறப்படும்.

## சங்கம் மருவிய காலமும் கொல்லாமையும்

*களப்பிரர் காலம், இருண்ட காலம், சங்கம் மருவிய காலம் எனப் பல* பெயர்களில் அழைக்கப்படுகின்ற அற இலக்கிய காலம் தமிழ்த் தத்துவ வரலாற்றில் குறிப்பிடத்தக்க காலமாகும். தமிழ் வைதீகச் சமய வழிபாடுகள். வாழ்வியல் முறைகள். போர் முறைகள். உணவுப் பழக்கவழக்கங்கள் என்று பல்வேறு நிலைகளில் தலைகீழ் மாற்றங்கள் நிகழ்ந்த காலமுமாகும். சங்ககாலத்தில் பின்பற்றப்பட்ட வாழ்வியல் முறைகளைச் சங்கம் மருவிய காலம் மாற்றியும் மறுத்தும் வந்ததை இலக்கியச் சான்றுகளின் வாயிலாக அறியலாம். மக்களின் வாழ்வியல் முறைகளில் ஏற்பட்ட இம்மாற்றங்கள், சமூகத்தில் ஏற்பட்ட சிக்கல்கள், ஆட்சிமுறை, போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு சமண, பௌத்த சமயங்கள் தமிழகத்தில் பரவின. சமயத் தத்துவங்களைப் பரப்பும் நோக்கில் இலக்கியங்களை இயற்றியவர்கள், 'கொல்லாமையை' முதன்மைப்படுத்திப் பேசியுள்ளனர். அக்காலத்தில் தோன்றிய அற இலக்கியங்களில் பேசப்படும், 'கொல்லாமை' குறித்த கருத்துகள் இங்கு ஆராயப்படுகின்றன.

## அற இலக்கியங்களும் கொல்லாமையும்

சங்கம் மருவிய காலம் நிலையாமைத் தத்துவத்தை வலியுறுத்தும் காலம் என்பது அறிஞர்களின் கருத்தாகும். அதன் பின்னணியில் எழுந்த அற இலக்கியங்கள் வீடுபேற்றையும் வாழ்க்கை நிலையற்றது. என்பதையும் வலியுறுத்திப் பேசின. வீடுபேற்றை அடைவதற்கான வழிகளைச் சொல்லுமிடத்தில், பிற உயிர்களைக் கொல்லாது இருத்தல் வேண்டும் எனவும், வாழ்க்கை நிலையில்லாதது எனச் சொல்லுமிடத்துப் புலால் மறுத்தலையும் வலியுறுத்துகின்றன. சங்கம் மருவிய காலத்தில் எழுந்த அற இலக்கியங்கள் மனித நேயத்தையும், அன்பையும் வலியுறுத்தும் நோக்கில், 'கொல்லாமை' என்னும் தத்துவத்தையும், புலால் மறுப்பையும் பேசியுள்ளன. புலால் உண்பதற்காகப் பிற உயிர்களைக் கொல்லாது இருத்தல் வேண்டும் என்பதோடு எவ்விதத்திலும் பிற உயிர்களைத் துன்புறுத்தக்கூடாது என்பதையும் கொல்லாமை எனும் சொல் விளக்கி நிற்கிறது. சமயங்கள்

தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளப் பயன்படுத்திய கூறுகளில் கொல்லாமையும், புலால் மறுப்பும் அடங்கும். சங்கம் மருவிய காலம் சமயங்களை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்புடன் இயங்கியதால் அனைத்து அற இலக்கியங்களும் கொல்லாமையைப் பெரிதும் பேசுகின்றன எனக் கூற முடிகிறது.

## அற இலக்கியங்களும் புலால் மறுப்பும்

உணவிற்காக ஊன் உண்ணுதலை மறுத்தல் 'புலால் மறுத்தல்' என்பர். 'ஊன் உண்டலை ஒழித்தல்' என்பார் பரிமேலழகர். இது சமண சமயக் கொள்கையாகும். பழந்தமிழர் ஊன் உணவு உட்கொண்டதையும் வழிபாட்டில் உயிர்களைப் பலியிடுதலையும் மேற்கொண்டனர் என்பதைச் சங்க இலக்கியச் சான்றுகள் வாயிலாக அறியலாம். 'கள்' உண்ணுதலோடு ஊன் உண்ட செய்தியை ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பதிவு செய்துள்ளது. போருக்குப் பின் கொற்றவை வழிபாட்டின் போது பலியிடுதல் நிகழ்ந்துள்ளது. போருக்குப் பின்னும் அறுவடைக் காலங்களிலும் கள்ளுடன் ஊன் உண்ட செய்திகளைச் சங்க இலக்கியப் பாடல்கள் உணர்த்துகின்றன ஆனால், சங்க மருவிய காலம் கள்ளுண்ணுதலையும் ஊன் உண்ணுதலையும் கடிந்து பேசுகிறது. புலால் தின்றால் அருள் அற்றுப்போகும் என்ற நம்பிக்கையில் புலால் மறுப்பைச் சமணம் வலியுறுத்திப் பேசுகின்றது. பௌத்தமும் அக்கொள்கையோடு உடன்பாடு கொண்டாலும் பிறர் தருகின்ற ஊனை உண்ணலாம் என்கிறது.

சமயச் சார்பற்ற வள்ளுவரும் புலால் மறுத்தலைப் பல குறள்களில் பேசியுள்ளார். தன் உடம்பைப் பெருக்க பிற உயிர்களின் ஊனை உண்ணுதால் எங்ஙனம் அருள் உடையவனாக ஆக முடியும் என்பதை,

> *"தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்*
> *எங்ஙனம் ஆளும் அருள்"* (குறள் - 251)

எனும் குறளால் குறிக்கிறார். அருள் என்பது கொல்லாமையும் அதனோடு பிறர் தருகின்ற ஊனை உண்ணாமையும் ஆகுமென வள்ளுவர் விளக்குகிறார்.

அதனை,

*"அருள்அல்லது யாதுஎனில் கொல்லாமை கோறல்*
*பொருள்அல்லது அவ்வூன் தினல்"* (குறள் - 254)

எனும் குறள் வழி அறியலாம். புலால் உண்போரின் வயிறு சுடுக்காட்டுக்கு ஒப்பாகும் என்பார் நாலடியார். இதனை,

"..........................................
...................... *புள்ளிற்கும் காடே, புலம் கெட்ட*
*புல்லறிவாளர் வயிறு."* (நாலடி. தீவினை. - 121:3-4)

எனும் வரிகளால் அறியலாம். திருக்குறள், நாலடியார் தவிர்த்து ஏனையத் தமிழ் அற நூல்களும் புலால் மறுப்பைப் பேசியுள்ளன.

அரிய நன்னெறிகளைப் பின்பற்றுபவர்கள் எக்காரணம் கொண்டு புலால் உண்ணுதல் கூடாது என்கிறது பழமொழி (பாடல் - 26). நான்மணிகடிகை. பிற உயிர்களைக் கொன்று தின்பதற்காக வளர்த்தல், புலாலை விலைக்கு வாங்கி உண்ணுதல் ஆகியன குற்றம் (பாடல் - 100) எனக் கடிந்துரைக்கிறது. மேற்கூறும் கருத்துக்களை வலியுறுத்தும் விதமாக ஏலாதி (பாடல் - 2) அமைந்துள்ளது. ஊனை உண்டு தன் உடம்பைப் பெருக்குதல் இன்னாதவை என இன்னா நாற்பது (பாடல்கள் - 12, 22) வலியுறுத்துகிறது. ஊனைத் தின்று உடலை வளர்த்துக் கொள்ளாமை இனிது என்கிறது இனியவை நாற்பது (பாடல் - 4). ஆக, சங்கம் மருவிய காலம் புலால் மறுத்தலை ஒரு இயக்கமாகவே செய்துள்ளது. அன்பும் மனிதநேயமும் மக்களிடத்தே பரவி வீடுபேற்றுக்கு வழிவகுக்க வேண்டும் என்று அக்காலகட்டத்திய சமயங்கள் கொல்லாமையையும். புலால் மறுத்தலையும் ஒரு சேர வலியுறுத்தியுள்ளன,

## கொல்லாமையின் விளைவுகள்

ஆதி கால மனிதன் வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்ட பொழுது, நாகரிக வாழ்க்கைக்கு மாறிய பொழுதும் உணவிற்காகவும் பலியிடுதலுக்காகவும் பிற உயிர்களைக் கொன்றான். அச்செயலைப் பாவம் என்றோ நன்மை என்றோ அவன் நினைக்கவில்லை ஆனால், சமயங்கள் தத்துவங்களைப் போதிக்கின்ற பொழுது அருள் உணர்வுக்குக் கொல்லாமையும் புலால் உண்ணாமையும் தேவை என்பதைக் கருத்தில்

கொண்டு. நம்பிக்கையின் அடிப்படையில் பிற உயிர்களைக் கொல்வதாலும் ஊன் உண்பதாலும் வரும் விளைவுகளைச் சிந்தித்தன. இக்கருத்துகளை அற இலக்கியங்களும் பதிவு செய்துள்ளன.

பிற உயிர்களைக் கொல்லும் தன்மையுடையவர் "நோயும் குற்றமும் பொருந்திய தீய வாழ்க்கை உடையவர்" என்கிறார் வள்ளுவர். இதனை,

*"உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர் உடம்பின்*
*செல்லாத்தீ வாழ்க்கை யவர்."* (குறள் - 330)

எனும் பாடல் வாயிலாக அறியலாம். உலகில் பாவம் செய்தவர்கள் என்று கருதப்படுபவர்கள் பிற உயிரைக் கொன்றவன், பிறர் செய்யும் கொலைக்கு உடன்பட்டவன், கொன்ற ஊனை விலைக்கு வாங்கியவன், அதனைச் சமைத்தவன், மற்றவர் பரிமாற உண்டவன் ஆகியோர் ஆவர் என்று சிறுபஞ்சமூலமும் பேசும்.

இதனை,

*"கொன்றான், கொலையை உடன்பட்டான், கோடாது*
*கொன்றதனைக் கொண்டான். கொழிக்குங்கால், கொன்றதனை*
*அட்டான் இடஉண்டான் இவரினும் ஆகுமென*
*கட்டுஎறிந்த பாவம் கருது."*

எனும் பாடல் விளக்கும். பிற உயிரைக் கொல்லுதலும், ஊன் உண்ணுதலும் பாவச் செயல் என்னும் கருத்துச் சங்கம் மருவிய காலத்தில் மேலோங்கி இருந்ததை இதன் வாயிலாக அறியலாம்.

பிற உயிர்களின் ஊனை உண்ணாத்திருத்தலால் மறுபிறவி நிகழாது என்றும் சிறுபஞ்சமூலம் பேசுகிறது (சிறுபஞ்சமூலம் - 17), அஞ்சாது பிற உயிர்களைக் கொலை செய்வது முழு மூடனின் செயல் எனச் சாடுகிறது திரிகடுகம். பிற உயிர்களைக் கொல்பவனைக் காண அனைவரும் அஞ்சுவர் என்றும் பேசுகிறது (திரிகடுகம் - 72).

இவ்வாறு சமண, பௌத்த சமயங்கள் வலியுறுத்திய கொல்லாமை என்னும் கருத்தை, அக்காலப் படைப்பாளர்கள் படைப்புகளில் பேசியுள்ளனர். பிற உயிர்களைக் கொல்வது பாவம் என்றும், பிற உயிரைக்கொன்று தின்பதால் அருள் நீங்கிப் பிறப்பை நீக்கும் செயல்கள் நடைபெறாது என்றும்,

பிற உயிர்களைக் கொல்பவர்கள் அஞ்சத்தக்கவர்கள் என்றும், முழு மூடர்கள் என்றும் இலக்கியங்கள் கொல்லாமையின் விளைவுகளாகச் சுட்டுகின்றன.

## கொல்லாமையின் நன்மைகள்

கொல்லாமையினால் வரும் நன்மைகளை அற இலக்கியங்கள் நிரம்பப் பேசியுள்ளன. உயிர் எதையும் கொல்லாதவனும், புலால் உண்ணாதவனும் கைகூப்பி வணங்கதக்கவன் என்று வள்ளுவர் பேசுகிறார். இதனை,

*"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும்."* (குறள் - 260)

எனும் பாடல் மூலம் அறியலாம். கொல்லா நெறியைப் பின்பற்றி வாழ்பவனின் ஆயுள் கூடும் என்கிறார் வள்ளுவர். அதனை,

*"கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்*
*செல்லாது உயிர்உண்ணும் கூற்று."* (குறள் - 326)

எனும் பாடல் வரிகளின் மூலம் உணர்த்துகிறார். பிற உயிர்களைக் கொல்லாமல் காப்பது அறங்களில் எல்லாம் தலையாய அறம் என்றும். பேசுவார்.

*"பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை."* (குறள் - 322)

எனும் பாடலால் அறியலாம். பிற உயிர்களைக் கொல்லாதவர்கள் துறவிகளைவிட மேலானவர்கள் என்கிறார் (குறள் - 325) உயிரைக் கொன்று புலாலை உண்ணாது இருப்பவனே இனியது உண்பவன் ஆவான் (நான்மணிக்கடிகை பாட் - 58) என்றும், எந்த நிலையிலும் பிற உயிர்களைக் கொல்லுதல் தீயதாகும் என்கிறது (நான்மணிக்கடிகை பாடல் - 92), சிறுபஞ்சமூலம் தன் உடம்பு வளர்வதற்காக மற்ற உயிர்களின் ஊனைத் தின்னாது இருத்தல் பிறப்பை நீக்கி வீடுபேற்றுக்கு வழிவகுக்கும் என்கிறது. இதனை,

"..............................
*ஓர்த்துஉடம்பு பேரும்என்று, ஊன் அவாய் உண்ணானேல்*
*பேர்த்து உடம்பு கோடல் அரிது."* சி.ப (பாடல் - 17)

எனும் பாடலால் அறியலாம். முதுமொழிக்காஞ்சி,

*"சார்பு இலோருக்கு உறு கொலை எளிது"*

எனும் வரிகளில் நல்லவரின் சார்பு இல்லாதவர் கொலைகளைச் செய்தல் எளிது என்கிறது. இவ்வாறு கொல்லாமையினால் அருள் பெருகும் என்றும், வாழ்நாள் கூடும் என்றும், உயிர்களைக் கொல்லாதவர்களை எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும் என்றும், துறவிகளின் வாழ்வைவிட மேலான வாழ்வு அவர்களுக்குக் கிடைக்கும் என்றும், பிறப்பை நீக்கும் மருந்தென்றும் கொல்லாமையின் நன்மைகள் அற இலக்கியங்களால் பேசப்படுகின்றன.

## முடிவுரை

சங்கம் மருவிய காலம் சமண, பௌத்த சமயத் தத்துவ ஆளுமைகளுக்கு உட்பட்ட காலமாகும். *இச்சமயங்கள் நிலையாமையை* வலியுறுத்தி வீடுபேற்றிற்கு வழி கூறின. பிறப்பை நீக்குவதற்கு அருளுணர்வு வேண்டும். அந்த உணர்வு பிற உயிர்களைக் கொல்லாது புலால் உண்ணாது இருத்தலால் மேம்படும் எனச் சமயங்களால் வலியுறுத்தப்பட்டன. அருளுடைமை, புலால் மறுத்தல், கொல்லாமை என்பன ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாகும். சமயங்கள் மக்களிடம் செல்வாக்குப் பெறுவதற்கும். பிற சமயங்களிடமிருந்து தங்களை வேறுபடுத்தி அடையாளப்படுத்துவதற்கும். புலால் மறுப்பையும் கொல்லாமையையும் வலியுறுத்தன. புலால் உண்பதால் வரக்கூடிய தீமைகளைச் சுட்டிக் கொல்லாமையினால் வரும் நன்மையைப் பேசி வீடுபேறுக்குச் சமயங்கள் வழி கூறுகின்றன. அந்த நோக்கிலேயே கொல்லாமை என்னும் கருத்தாக்கம் அற இலக்கிய காலத்தில் கையாளப்பட்டுள்ளது. இவ்வாறு சமண பௌத்த சமயங்களல் முன் மொழியப்பட்ட கொல்லாமை, புலால் மறுப்பு ஆகிய கொள்கைகளைக் சைவ, பௌத்த சமயங்களால் முற்றாக ஏற்றுக் கொண்டதோடு அவற்றைத் தங்களின் தனித்த கொள்கையோடு இனம் காட்டிக் கொள்ள முயன்றன. இதன் உச்ச நிலையாக உணவு முறைகளை சைவம். அசைவம் என வகுத்துரைத்தன.

# இளைஞர்களே விழிமின்

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

இளைஞர்களே! இளைஞர்களே! நாளை ஏட்டை
எழுதவந்த 'கனவுக'ளே! குலுங்கப் போகும்
விளைச்சலுக்கே 'நாற்றங்கால்' நீங்கள்! நல்ல
விஞ்ஞான விடியலுக்கே 'வெள்ளி' நீங்கள்!
களைபோன்றே கிளைத்திருக்கும் சாதி பேதக்
கசடுகளை எரிக்கவந்த 'பிழம்'பே நீங்கள்!
தளையறுத்துக் கிளம்புங்கள்! புதுமை பூத்த
சமத்துவச்சீர்ச் சமுதாயம் படைத்தி டுங்கள்!

பாட்டனுக்கும் முப்பாட்டன் விமான மேறிப்
பறந்தானா? ஒலி, ஒளிகள் காற்றில் வந்து,
பாட்டாக, வண்ணவண்ணப் படங்க ளாகப்
பரவசத்தைக் குவிக்கமேன்று நினைத்திட் டானா?
காட்டினிலே விலங்கோடு விலங்காய் வாழ்ந்தான்
கடும்உழைப்பால், சிந்தனையால் உயர்ந்தான்! நாமும்
நாட்டினிலே 'எடிச' னைப்போல், 'கியூரி' யைப்போல்
நல்லபல புதுமைகளைக் காண வேண்டும்!

பறக்கின்ற சிட்டுகளோ, கடலின் மீனோ
பசியாலே செத்ததென்ற சேதி உண்டா?
இறக்கின்றான் உணவின்றி மனிதன் மட்டும்!
ஏன்இன்னும் இழிநிலைமை? மண்ணின் மீது

திறத்தோடும் உரத்தோடும் பாடு பட்டுச்
செம்மாந்த வாழ்க்கைநலம் பெறுதல் வேண்டும்!
நெறிப்பேதச் சாதிமத மடமைப் பேயை
வெடிவைத்துப் பொடிப்பொடியாய்த் தகர்க்க வேண்டும்!

சிந்தனையைப் போற்றுங்கள்! அறிவுப் போக்கின்
திசைக்குவிழி மாற்றுங்கள்! சோம்பித் தூங்கும்
மந்தநிலை தூற்றுங்கள்! சிலிர்த்தெ ழுந்தே
மாப்பணிகள் ஆற்றுங்கள்! பாசம் என்னும்
பந்தநன்னீர் ஊற்றுங்கள்! நலிந்து தேய்ந்தோர்
துயர்துடைத்துத் தேற்றுங்கள்! படைப்பில் எல்லாம்
சொந்தமென்றே சாற்றுங்கள்! வெற்றி யூரின்
சுடர்க்கொடியை ஏற்றுங்கள்! எழுக இன்றே!

---

## வாசகர் வாசகம் (1)

மதுரைச் செந்தமிழ்க் கல்லூரி
மாசில் பட்டமளிப்பு விழா
சதுரா டுஞ்செந் தமிழ்ச்சான்றோர்
சாற்று சிறப்பு வாழ்த்துரையால்
மதுரத் தமிழோ சைமுழங்க
மாண வர்க்குப் பட்டயங்கள்
இதுபோற் பன்னூ றாண்டினிதே
எழிலுற நல்க வாழ்த்தினமே!

அன்பன்,
**புலவர் நு.ர. ஆறுமுகம்**
**செயலர், தமிழ் வளர்ச்சி மன்றம், சென்னை**

## தமிழக அரசின் தமிழ்த்தாய் விருது பெற்ற மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு

# *வாழ்த்துப்பா*

முத்தமிழை வளர்ப்பதற்குச் சங்கம் மூன்று
முறையாகக் கண்டார்கள் பாண்டி மன்னர்
தித்திக்கும் தேன்தமிழ் மூன்றாம் சங்கம்
திகழ்மதுரை நகர்கண்டார் என்பார் சான்றோர்
எத்திக்கும் தமிழ்மணந்த நிலைமை மாறி
ஏடுபல கிடைக்காத நிலையில் இங்கே
*சத்தான தமிழ்காணச் சங்கம் கண்டார்*
சதுர்பாண்டித் துரைத்தேவர் தவத்தின் வள்ளல்.

அறிஞரெலாம் கூட்டமைத்துத் தமிழின் மேன்மை
அகிலத்தில் பரப்புதற்குத் திட்டம் செய்தார்
செறிவுள்ள தமிழ்நூல்கள் தொகுத்த ளித்துச்
செந்தமிழின் கல்லூரி ஒன்றும் தந்தார்
அறிவாளர் பலர்கற்க வழிவ குத்தார்
ஆற்றல்சால் மறமன்னர் நிலைத்து நின்றார்
நெறிநின்ற தேவரவர் வழியில் நின்று
நிலைத்ததுவே நூறாண்டாய்ச் சங்கம் இங்கே.

தமிழுரைத்த கல்லூரி பலவும் இன்று
தமிழன்றிப் பிறபாடம் பயிற்றும் போதும்
தமிழுக்கே உயராய்வு மைய மாகத்
தகவுடனே தமிழ்ச்சங்கம் விளங்கக் கண்டோம்
தமிழாய்வுக் கட்டுரைகள் பலவும் இங்கே
தரமாக விளங்குவதை நாளும் காண்போம்
இமியேனும் பிறழாது தமிழைப் போற்றும்
இருப்பிடமாய்த் தமிழ்ச்சங்கம் இருக்கக் காண்போம்.

தமிழ்த்தொண்டு புரிவோர்க்கே வழங்கு கின்ற
தமிழ்த்தாயின் விருதினையே முதலில் பெற்ற
தமிழ்ச்சங்கம் மதுரைதான் என்னும் போது
தமிழ்மாது பெருமிதத்தால் தலைநி மிர்ந்தாள்
தமிழ்நாட்டின் அரசுக்குப் புகழும் சேர்த்தாள்
தமிழ்மக்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி பூத்தாள்
இமிழ் கடல்தான் இருக்கின்ற வரையும் இந்த
எழுச்சிமிகு வரலாறு நிலைத்து நிற்கும்.

உண்மைகண்டு பரிசுதந்த முதல மைச்சர்
உயர் புகழின் ஜெயலலிதா வாழ்க! வாழ்க!
தொண்டுபுரி தமிழ்ச்சங்கம் மதுரை யோங்க
தொடர்ந்தென்றும் நிலைபெறவே வாழ்க! வாழக!
கண்டுநிகர் செந்தமிழின் புகழே யோங்கக்
கடுகியுழை பொறுப்பாளர் பலரும் வாழ்க!
பண்டுமின்றும் நிகழ்தமிழைப் புதுமை காண
பாடுபடும் செந்தமிழ்க்கல் லூரி வாழ்க!

அன்புடன்,
**புலவர் மு. சன்னாசி**
மதுரை

# வாசகர் வாசகம் ②

பாராட்டு நேரிசை வெண்பா

தேன்நேர் சுவைகொள் தமிழ்மணக்கும் செந்தமிழில்
வான்நேர் புகழின் வரலாற்றைத் – தான்கொள்ளும்
சங்கம், அரசின் தமிழ்த்தாய் விருதுபெற்ற
தங்கவுரை தந்தது; நல் வாழ்த்து !

அன்புடன்,
**புலவர் சி. பாண்டுரங்கன்**
ஆம்பூர்

## வாசகர் வாசகம் 3

செந்தமிழாம் இதழ்பரப்பும் மணம்தான் ஈர்க்கும்
சீர்சிறப்பாய்க் கட்டுரைகள் மெய்யே வார்க்கும்
முந்திவந்தே கவிதைத்தேன் வழியும்; வாழ்ந்த
முன்னோர்கள் வரலாற்றின் பெருமை சாற்றும்
சிந்தனைக்கு நல்விருந்தாய் உ.வே. சாதான்
செந்தமிழுக் காற்றியதொண் டிதழ்விரிக்கும்
நந்தமிழர் இசைக்கருவி ஏக்கம் தாக்கம்
நல்கிடும் நல் தமிழ்ச்சங்க இதழே வாழ்க!

அன்புடன்,
**பாவலர் அறிவரசன்**
திருலோக்கி

## வாசகர் வாசகம் 4

அன்புசால் செந்தமிழ் ஆசிரியர் அய்யா அவர்களுக்கு வணக்கம்.

ஏப்ரல் இதழ் வந்து படித்துச் சுவைத்து மகிழ்ந்தேன். முந்தைய திருப்பள்ளி எழுச்சியின் வகைப்பாடும் வளர்ச்சியில் இன்றுள்ள பள்ளி எழுச்சியின் விழுமிய கருத்து வெளிப்பாடும் பற்றி நன்கு ஆய்ந்து, அலசி முனைவர் இராசா வழங்கியிருந்தார். தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் பதிப்பாசிரியராக, உரையாசிரியராக ஒளிவீசி முத்தமிழில் தோய்ந்து இசைத்தமிழ்ப் பெருமையையும் நாடகத் தமிழின் தொன்மையையும் உலகெங்கும் பரப்பிய வித்தகர் என்பதை திரு. வளன் அரசு விளக்கி விவரித்து நிதர்சனப்படுத்தியிருந்தார். சங்கதி எனும் நாவலின் ஆய்வுரையில் ஆண், பெண் பாலினப்பாகுபாடு, பாலின வேறுபாடு பற்றிய மாற்றுக் கருத்துக்களைக் கூறி விளைவுகளையும் பெண்களின் பழைமை அவலத்தையும் இன்றைய வளர்ச்சியிலும் உலக அளவில் ஆண்களால் பெண்கள் இழிவு படுத்துவதையும் திருமதி ரேணுகா தேவி நன்கு படம் பிடித்துக் காட்டியிருந்தார். குறள் சட்டம் உலகையாளும் நேர்த்தியை நாம் இருவிழியில் காணுவோமா? எனும் ஏக்கத்தின் தாக்கத்தை கவிவேந்தர் தன் கவிதை வழி வழிய விட்டிருந்தார்.

அன்புள்ள,
**புலவர் ந. ஞானசேகரன்**
திருலோக்கி

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 June 2012 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month


# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- ✦ இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மூ. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI M.A., M.PhIL** on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1**, and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI M.A., M.Phil.**